கடவுள் - படும்பாடு

எழுதியவர் :
"இமயவரம்பன்"

இடைக்காலப் புலவர்கள் கடவுளை எப்படி எப்படி நையாண்டி செய்திருக்கிறார்களென்று இந்நூல் விளக்குகிறது

முதற்பதிப்பு 1949 மார்ச்

விலை 8 அணா

13-6.77

★

வெளியிடுவோர்:

செந்தமிழ்ப் பதிப்பகம்

கீழ ராச வீதி — புதுக்கோட்டை.

பதிப்புரை

○

கடவுள்படும் பாடு வேடிக்கையான கட்டுரைகளின் தொகுப்பு. மனம் போன போக்கில் கடவுள்களுக்குப் புராணங்களையும் மகத்துவங்களையும் திருவிளையாடல்களையும் படைத்து வைத்தவர்களைச் சொல்லவேண்டும். கடவுளை நையாண்டி செய்யும் ஒவ்வொரு பாடலும், அந்தந்தக் கடவுளைச் 'சிருஷ்டித்து வைத்த' புண்ணியவான்களுக்குத் தரும் சவுக்கடியேயாகும். நண்பர் இமயவரம்பன் இத்தகைய பாடல்களில் ஆழ்ந்து, சுவை மிகுந்த கட்டுரைகளை நமக்கு வழங்கி யிருக்கிறார். கட்டுரைகள் நகைச் சுவை விருந்தாய் மட்டும் அமையாமல் அறிவு விளக்கமாகவும் எழுதப்பெற்றுள்ளன.

தமிழ் இலக்கியத்தில் சுவையான இப் பகுதியைத் தெரிந்தெடுத்து, பாடல்கூறிப் பொழிப்புரை கூறி மற்றவை 'படிப்பவர் சிந்தனைக்கு' என்று விடாமல், நயமான விமரிசன நூலாக இதனை ஆக்கியளித்த இமயவரம்பன் அவர்கட்குத் தமிழகம் என்றும் நன்றி செலுத்தும்.

செந்தமிழ்ப் பதிப்பகத்தார்

உள்ளுறை

1. நிந்தாஸ்துதி என்பது என்ன?

இடைக்காலத்தில் நையாண்டிப் பாடல்கள் பல தோன்றின. இந்த நையாண்டிகட்கும், கேலிகட்கும் இலக்காகி யிருக்கிறவர்கள் கடவுள்கள். கடவுளர்கள் இந்தக் கேலிகளுக்கு ஆளாகவேண்டி யிருந்தமைக்குக் காரணம் உண்டு. இடைக்காலத்துத் தமிழக வரலாற்றை இலக்கிய வளர்ச்சியுடன் ஒப்பநோக்குவார்க்கு இது புலனாகும். புராணங்கள் ஆண்டவனைக் கதாநாயகனாக வைத்துக்கொண்டு புற்றீசல்கள் போல் தோன்ற ஆரம்பித்தன. நாளுக்கு நாள் புதுப் புதுப புராண கர்த்தாக்கள் தோன்றினர். பல புராணங்களுக்கு ஆண்டவனே சிருஷ்டி கர்த்தாவாகவும் இருந்தார் என்று கூறி ஏமாற்றினர். இறைவனுக்கும் அடியார்களுக்கும் 'அற்புத' சக்திகளைக் கொடுப்பதன் மூலம மதத்திற்கு ஆள் சேர்த்தனர். கடவுள் நம்பிக்கையை மக்களின் மனத்தில் ஒட்ட வைப்பதற்கு அவை பசை போல் உதவின. எலும்பைப் பெண்ணுருவாக்குதல், கறியாய்ச் சமைக்கப்பெற்ற பாலனை மீண்டும் வரவழைத்தல், நெருப்பில் நடத்தல், முதலை உண்ட பாலனை உயிர்ப்பித்தல் போன்ற நடக்க முடியாத நிகழ்ச்சிகளை நடக்க வைத்தனர் புராண கர்த்தாக்கள். வடமொழியிலிருந்த பல புராணங்களைத் தமிழாக்கம் செய்வதிலே ஈடுபட்டிருந்தனர் பல 'புண்ணியவான்கள்'. ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு கதையும் மான்மியமும உண்டாயின. புலவர்களின் திறமை 'ஸ்தல புராணங்கள்' எழுதுவதிலே சென்றது. ஆண்டவன் பல கதைகளுக்கும் கதாநாயகனாக இருந்து கதைக் கடலில் நீந்தவேண்டியவராயிருந்தார். இதனால் ஆண்ட

வன்பால் மக்களுக்கிருந்த மெய்யான அன்பு மெல்ல மெல்ல விலகுவதாயிற்று. பயபக்தியுடன் விளங்க வேண்டியவர்கள் — மெய்யன்பால் உருக வேண்டியவர்கள் — வழிபாடு உள்ளத்தின் ஒருமைப்பாட்டிற்காக — அமைதிக்காக என்று 'அதிகப் பிரசங்கம்' செய்பவர்கள் உயர்ந்த பரம்பொருளின் பேரால் இவ்வாறு எழுதப்படும் பொய்க் கதைகளை மனத்தால் வெறுத்தாலும் வெளியே சொல்லத் திடமில்லாதவர்களாகப் பயங்கொள்ளிகளாக இருந்தனர். படித்த புலவர்களால் இந்தப் பொய்க்கதை ஆபாசங்களைப் பொறுக்க முடியவில்லை. ஆண்டவனையே நோக்கிக் கூறுவதாகத் தங்கள் பாடல்களை அமைத்துக் கொண்டு கிண்டல் செய்ய ஆரம்பித்தனர். இந்தப் பாடல்கள் 'உற்பத்திக்கிடங்கை' அசைக்க முடியவில்லை; ஆனால் ஒரு அச்சத்தை அங்கே ஏற்படுத்தி வைத்தன. அவர்கள் புலவர்களின் இத்தகைய நையாண்டிப் பாடல்களை 'நிந்தாஸ்துதி' என்று பெயர் கொடுத்து மழுப்பி விட்டனர். நிந்தாஸ்துதி என்றால் கொஞ்சம் பொருளில் கருத்தூன்ற வேண்டும். ஆண்டவனை நிந்தித்துப் பாடினாலும் அது அவர் மேல்பாடப்படும் 'ஸ்துதி' தானாம்! செருப்படியும், வில்லடியும், கல்லடியும், சொல்லடியும் ஆண்டவனுக்குப் பூமாலைகள் என்று சொன்னவர்கள் நிந்தையை ஸ்துதி என்று ஏன் கூறமாட்டார்கள்! சமயக் கண் கொண்டு பார்த்தால் செருப்படி 'திருப்பாத'மாகும்; பிச்சையோடு 'திருவோடு' ஆகும்!

இந்த நையாண்டிப் பாடல்களை ஒருமுறைக்குப் பலமுறை படித்துப் பார்க்க வேண்டும். அவற்றில்தான் எவ்வளவு அலட்சியம்! எவ்வளவு கிண்டல்!

ஏமாற்று வித்தைகளும் பொய்க் கதைகளும் ஆண்டவனைச் சுற்றி முளைத்த காரணத்தினால், ஆண்டவன் மேல் நிந்தாஸ்துதிகள் தோன்ற வேண்டியதாயிற்று. கடவுள் நம்பிக்கையும், மூடபக்தியும் இருக்குமானால், புராணக் கதைகளில் கண்மூடித்தனமான பற்றுதல் இருக்குமானால், ஆண்டவனைப்பற்றி இவ்வளவு உதாசீனமாக வாக்குகள் தோன்றியிருக்க முடியாது! காளமேகம், இரட்

டைப் புலவர், இராம கவிராயர் போன்ற புலவர்கள் திரை மறைவில் வேலை செய்த நாஸ்திகப் புலவர்களே யாம். அவர்கள் தங்களை அந்தப் பெயருக்குக் கீழ் விளம் பரப்படுத்திக்கொள்ளவில்லை என்பதைத் தவிர அவர்கள் முழுக்க முழுக்க நாஸ்திகவித்தையே தூவிக்கொண்டிருந் தனர். இந்த இருபதாம் நூற்றாண்டிலே விளம்பரப்படுத் தப்பட்ட, திடம்வாய்ந்த நாஸ்திகர் செய்வதையே, சொல் வதையே அன்றும் அவர்கள் செய்தும் சொல்லியும் வந் தார்கள். இரு சாரார்க்கிடையேயும் சொல்லுகின்றமுறை யில் வேற்றுமையே தவிர வேறில்லை!

ஆண்டவன் பிள்ளைக் கறி கேட்ட அநாகரிகத்தை இன்றும் நாம் வெறுக்கிறோம்; அன்றும் அவர்கள் வெறுத்திருக்கிறார்கள். 'சிறுத்தொண்ட நாயனாரைச் சோதித்து அவரது அன்பை உலகிற்குக்காட்ட வந்தார் சிவபெருமான்; ஒரே குழந்தையை அறுத்துச் சமையல் செய்து தருமாறு கேட்டார்'என்று பெரிய புராணம் அங் கலாய்க்கும் 'தொண்டர் மகத்துவம்' மட்டமானது என்று சொல்லுகிறோம். 'வணங்கத்தக்க பரம்பொரு ளின் மேல் இவ்வாறு அபாண்டமான பழிதரும் கதை களை, காட்டுமிராண்டிச் செயல்களை ஏற்றலாமா?' என்று புராண வாதிகளை இன்று நாம் கண்டிக்கிறோம்!' 'ஆண் டவனின் மெய்ப் புகழுக்கு இழுக்குத் தரும் பொய்க் கதை களை நம்பலாமா?' என்று மக்களிடம் கேட்கிறோம். இப் படி இன்று நாம் கையாளும் முறையிலிருந்து அந்தக் காலத்துப் புலவர்கள் எவ்வாறு வேறுபட்டிருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும்!

ஓர்குடிக்கே ஓர்மகவாம் சிறுத்தொண்டன் பிள்ளைபழி
ஒன்றே போதும்!
பார்குடிக்குள் செங்காட்டங் குடிமேவும் உத்திரா
பதியாரே நீர்!
கார்குடிக்கும் கஞ்சுகமும் கப்பறையும் பொக்கணமும்
கையிற் கொண்டே
ஆர்குடியைக் கெடுப்பதற்கிங் காண்டிவே டங்கொண்டே
அலைகின் றீரே!

செங்காட்டங்குடியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு உத்திராபதியார் என்று பெயர். அவரிடம் கூறுவதாக இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.

"ஒரு குடிக்கு ஒரே பிள்ளையாயிருந்த குழந்தையை அறுத்துக் கறி சமைத்துத் தா என்று கேட்ட பழி ஒன்றே போதுமே! உன் பெருமையெல்லாம அந்த ஒரு பழியிலேயே தூள் தூளாக மாறி விடுமே! இனிமேல் யார் குடியைக் கெடுப்பதற் கென்று கப்பறையையும பிச்சை யோட்டையும் கையில் ஏந்திக் கொண்டு அலைகிறீர்?" என்று கேட்கிருர்.

இன்றைய சீர்திருத்தக்காரர்களின் சொற்களும், விஷயமும் இதையொட்டியே இருக்கும். புலவர்களின் சொற்கள் இவர்களைக் காட்டிலும் மிஞ்சிவிடுகின்றன. மிகக் கடுமையாக வெளிவருகின்றன. சீர்திருத்தக்காரர் கள் மக்களிடம் நேர்முகமாக, நேரடியான வார்த்தை களில் விஷயத்தை ஒளிவு மறைவு இல்லாமல் விளக்கு கிருர்கள். அந்தக் காலப் புலவர்கள் ஆண்டவனிடமே சொல்லுவதாகப் பாட்டுக்களை மக்களிடம் பரப்பினர்.

"சிறுத்தொண்டன் பிள்ளை பழி ஒன்றே போதும்" என்ற வரியைப் படித்துப் பார்க்க வேண்டும். சிறுத் தொண்டன் கதையைப் பழி என்று சொல்வதற்கு ஒரு புலவனுக்குத் தென்பும் திடமும் இருந்திருக்கிறதே! அதை மெச்ச வேண்டும்!


'அடியாரின் மெய்யன்பைச் சோதிக்க வந்த இறைய வனுக்கு வேறுவழி யொன்றுமே 'ஞானோதயம்' ஆக வில்லையா? ஓர் குடியைக் கெடுத்துத்தானு சோதனை செய்ய வேண்டும்?' இப்படிக் குமுறியிருக்க வேண்டும் புலவரின் உள்ளம். வருகின்ற அடிகளையும், சொற் களையும், சுவைத்துப் பார்த்தால் அவற்றின் விரைவும்

நகைப்பும், குறும்பும் நமக்குப் புலனாக முடியும். 'ஆண்டவனே! பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக் கொண்டு

> ஆர்குடியைக் கெடுப்பதற்கிங்கு, ஆண்டிவே டங்கொண்டே
> அலைகின் றீரே!'

என்று கேட்கிறார் புலவர்.

இவ்வாறு ஆண்டவனைப் பற்றி நையாண்டியாகப் பாடிய பாட்டுக்கள் தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை விருந்தாகும்! இந்த நிந்தாஸ்துதி பாடல்களில் சிறந்தவற்றை இந்நூலில் தொகுத்திருக்கிறேன்.



2. எடுத்த பொற்பாதம்

சைவ சமயம் சமர்ப்பித்த கடவுட் கும்பலிலே எனக்கு ஒரு சாமியின்மீது கொஞ்சம் பிடித்தம உண்டு. அதுதான் ஆடும் கூத்தர்!

சமண சமயம் ஆடல், பாடல், எதுவுமே கூடாது என்று சொல்லிக்கொண்டிருந்த காலத்தில் சைவசமயத்தினர் ஆடிய சாயலிலே ஒரு கடவுளை உண்டாக்கிக் கொண்டனர். கலை வடிவிலே ஆண்டவன் படைக்கப்பட்டார். தெரிந்தோ தெரியாமலோ அவ்வாறு செய்தனர். இதற்காக நான் என் மூதாதையர்களை வாழ்த்துகிறேன்! அவர்கள் கண்ட ஆடுங் கூத்தர் பார்ப்பனக் கும்பலின் ஆதிக்கத்தின்கீழ் தானே விடப்பட்டிருக்கிறார் என்பது தான் வருத்தம். தில்லை நடராசர் தீட்சிதர்கள் கையில் தானே சிக்கிக்கொண்டிருக்கிறார்! பிழைப்புக்குரிய சரக்காகப் பிராமணர்கள் அவரை ஆக்கிக்கொண்ட பிற்பாடு, ஊழல்களை எடுத்துச் சொல்லவேண்டிய நிலையில், கலைநயத்தைநினைத்து நாம் கொட்டாவி விட்டுக்கொண்டிருக்க முடியுமா? முட்டாள் பக்தர்கள் கலா ரசிகர்களா?

ஒரு பாண்டியன் தில்லை நடராசர் ஒரு காலை ஊன்றி, ஒரு காலைத் தூக்கி ஆடும் வடிவைக் கண்டான். அவனுடைய ப்க்தியிலே திடீர் வேகம் ஏற்பட்டது. ஏற்படவேண்டிய அளவுக்குமேல் மெய்யன்பு ஏற்பட்டுவிட்டது. 'ஒரு காலைத் தூக்கிய ஆண்டவன், தூக்கிய நாள் முதல் அப்படியே இருக்கிறாரே! தூக்கிய திருவடியை மாற்றி, ஊன்றிய திருவடியைத் தூக்கக் கூடாதா? கால் வலிக்குமே' என்று கவலைப்பட்டானாம் அந்தப் பாண்டியன்! மிக வருந்தித் தவங்கிடந்தானாம்!

அற்பமான இந்த மானிட ஜந்துவுக்கு, சர்வ வல்லமையுள்ள ஆண்டவன்மீது எவ்வளவு கவலே!

ஒரு சிற்பியிடம் சொல்லியிருந்தால் நடராசாவை நினைத்தபடியெல்லாம் ஆடவைத்திருப்பானே! இதற்காக அன்ன ஆகாரமின்றித் தவம் கிடந்திருக்கிருனே! முட்டாள் பாண்டியன்!

நடராசர் சிலையை மேல்நாட்டுக் காட்சிச் சாலையில் வைத்திருக்கிருர்களாம். 'கலை நயத்தை மெச்சி வெள்ளைக்காரர்கள் தூக்கிக்கொண்டு போயிருக்கிருர்கள்' என்று என் நண்பர் பெருமையடித்துக்கொண்டார. உண்மையென்றேன். "அந்த நடராசர் ஒருகண்ணுடி அலமாரியில் இருப்பார். அங்கே தேங்காய் உடைப்பவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். தீபம் காட்டமாட்டார்கள். தீட்சிதர்கள் யாரும் கூட இருக்கமாட்டார்கள். வெள்ளைக்காரர்களிடம் 'எங்கள் நடராசாவைத் தூக்கிக் கொண்டு போனுல் இன்னின்ன செய்யவேண்டும்' என்ருவது சொல்லியிருக்கலாம். அல்லது ஒரு தீட்சிதரையாவதுகூட அனுப்பியிருக்கலாம்; தனியாக அனுப்பிவிட்டார்களே" என்றேன்.

"சு ம. பேர்வழிகளே இப்படித்தான். எடுத்ததற்கெல்லாம் கிண்டல் செய்வார்கள்" என்ருர். அவரால் சொல்ல முடிந்தது அவ்வளவுதானே!

"எடுத்த பொற்பாதம் காணப் பெற்ருல் மனிதப்பிறவியும் வேண்டுவதே" என்று மெய்யடியார்கள் பரவசமாவதுண்டு. "அப்படிப்பட்ட திருப்பாதத்தைத் தூக்கி ஏன் ஆடுகிருர்?" என்று நாம் கேட்டால் சைவ ஆகமங்கள் ஏதேதோ சொல்லும். காளமேகப் புலவரிடம் இந்தக் கேள்வியைப் போட்டுப் பார்க்கவேண்டும்.

திருவாரூர், தேருக்கும் திருவிழாவுக்கும் பேர் போனது. பக்தகோடிகள் திரள் திரளாக வந்து தேர்வடத்தைப் பிடித்து இழுத்துப் புண்ணியத்தைத் தேடிக்கொள்ளுவார்கள். ஆடியபடி, திருவாரூர்த் தியாகேசமூர்த்தி ஊர்

வலம் வருவார். அந்தக் காட்சியைக் காளமேகப்புலவர் காண்கிறார்.

ஆடாரோ! பின்னையவர்
அன்பரெலாம் பார்த்திருக்க
நீடாரூர் வீதியிலே
நின்றுதான் — தோடாரும்
மெய்க்கே பரிமளங்கள்
வீசும் தியாகேசர்
கைக்கே பணமிருந்தக் கால்.

சாமிகளிலும், ஏழைச்சாமி, பணக்காரச்சாமி என்ற இரண்டுவகையும் இருக்கின்றன. எத்தனை சாமிகள் அரசமரத்தடியிலும், குளக்கரையிலும், போவோர் வருவோரின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கிக் கிடக்கின்றன! வேறு வழி! ஏறிட்டுப் பார்க்கக்கூட யாரும் விரும்புவதில்லை. பக்தகோடிகள்கூட, கோயிலும் குளமுமாய், தூபமும் தீபமுமாய், அர்ச்சகரும் மணியுமாய் இருக்கிற கடவுளைத்தான் வணங்குகிறார்கள். கண்ணை மூடிக்கொண்டு (செக்குமாடு சுற்றுவதுபோல) சுற்றிவந்து கருணைக் கேங்கி நிற்கிறார்கள்! இந்தப் பணம் மனிதர்களை மட்டுமா ஆட்டிவைக்கிறது! பணம பாதாளம்வரைக்கு மட்டும் பாயவில்லை; தேவலோக வாசிகளையும் ஒரு அசை அசைத்துத்தான பார்க்கிறது!

எல்லாம் வாய்க்கப் பெற்றிருக்கிற கடவுள் ஏன் மகிழ்ச்சியாக இருக்கக்கூடாது! கையில் பணமிருந்தால் எல்லாச் சீர்வரிசையும் நடக்காமலா போகும்? ஆகையினால்தான் தியாகேசர், அன்பர்களெல்லாம் பார்த்திருக்க, நீடாரூர் வீதியிலே நின்று ஆடுகிறாராம்!

●

கவலை!

இது பொல்லாதது; மனிதனை நடைப்பிணமாக மட்டும் ஆக்குவதில்லை. 'எலும்பொடிந்த' பிணமாக

உட்கார வைத்து விடுகிறது. சசக்கிய முல்லைப்பூவைப் போல உள்ளம் இதனிடம் தவியாய்த் தவிக்கும்!

கவலையில்லாதவன் களிமகனாக இருக்க முடியும்! ஆடல் பாடல் அனைத்திலும் பங்கெடுத்துக் கொள்ள முடியும்? கவலைகள் பெரும்பாலும் குடும்பத்தால் ஏற்படுகின்றன. குடும்பக்கவலை ஒழிந்தால் எல்லாக்கவலைகளும் ஒழிந்த மாதிரிதான்! வீடு, வாசல், பெண்டு, பிள்ளை— இதுதானே குடும்பம்? சிவபெருமானுக்குக் குடும்பக் கவலை ஒன்றும் இல்லையாம்; அதனால்தான் ஆடுகிறாராம்.

வெள்ளிமலை பொன்னின்மலை
மேவிமகிழ் வீடாகிப்
பிள்ளைகளோ புத்திசொலும்
பிள்ளைகளாய் —தென்னுமுக
வாடா வடிவுடையாள்
மாமனையாள் ஆனக்கால்
ஆடாரோ ஒற்றியப்பனார்?

இது மற்றொரு புலவரின் பாடல். வெள்ளிமலை பொன்மலை ஆகிய இரண்டும் வீடாக இருக்கின்றன. வீடுவாசல்களைப் பற்றியும் கவலையில்லை. குழந்தைகள் அப்பனுக்கே புத்திசொல்பவையாய் இருக்கின்றன. சுப்பிரமணியர் 'ஓம' என்ற மந்திரத்தின் உட்பொருளைச் சிவனாருக்கு ஓதுவித்தார் அல்லவா? பெண்டாட்டியோ நல்ல அழகி; என்றைக்கும் கிழவியாகமாட்டாள்! இரவு பகல் எல்லாம் ஒரே இன்பந்தானே! வேறு என்ன வேண்டும்! எதற்காகக் கவலைப்பட வேண்டும்? எனவே அந்தப் பேற்றை எண்ணி ஆண்டவன் பூரித்துப்போய் ஆடுகிறாராம்!

"இவ்வளவு நலன்களையும் உடைய சிவனார் ஏன் நஞ்சருந்தினார்?' என்று ஒரு சந்தேகம் கிளம்புகிறது! மகிழ்ச்சியால் ஆடுபவர் நஞ்சைத் தூக்கிச் சாப்பிட்டு விட்டாரே! வேறு ஏதாவது கவலைகள் இருக்

கின்றனவோ? வாழ்வை வெறுத்தவன்தானே நஞ்சைச் சாப்பிடுவான்!

வள்ளலெனும் பெரிய
மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு
மேயிருக்க —தெள்ளுமையாள்
அஞ்சல்அஞ்சல் என்றுதினம்
அண்டையிலே தானிருக்க
நஞ்சுதனை ஏனருந்தி னார்?

சிவபெருமான் புராணப்படி செய்த இரண்டு செயல்களை எடுத்துக் கொண்டு, அவை ஒன்றுக் கொன்று நேர்மாறாக இருப்பதை வைத்துப் பாட்டிலே வேடிக்கை காட்டுகிறார்கள். நல்ல பொழுது போக்கு!

இந்த உலகத்தைப் படைத்த, எண்ண முடியாத வல்லமையுள்ள ஆண்டவனை, மனிதனைப் போலவே பாவித்து, நம் சுக துக்கங்களை அவன்மேல் ஏற்றி விடுகிறோமே!

காளமேகப் புலவர் இந்தப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டாகச் சாட்டையைத் திருப்பிப் பிடிக்கிறார். "என்னய்யா குடும்பம் பெருத்துப் போச்சு; சம்சார சாகரத்தில் இறங்கியாச்சு. குழந்தைகள் இரண்டு பிறந்து விட்டன. இன்னுமா உனக்கு ஆட்டம் வேண்டியிருக்கிறது?" என்று கேட்கிறார். ஆடும் கூத்தர் இந்தப் புலவர்களிடம் கொஞ்சப் பாடா படுகிறார்!

ஆடும் தியாகரே!
ஆட்டமேன்? இங்குமக்கு
வீடும் சமுசாரம்
மேலிட்டுக் —கூடிச்

செருக்கி விளையாடச்
சிறுவரி ரண்டாச்சே!
இருக்குமூர் ஒற்றியூர் ஆச்சே!

ஒற்றியூர் என்பது சொல் விளையாட்டு. திருவொற்றியூர் எனப்படும் நகரில் இருக்கும் சிவபெருமான், ஒற்றிவைக்கப் பட்ட ஊரில் இருக்கிறார். அடமானத்தில் கிடக்கிற ஊரில் இருக்கிறார். சொந்த இருப்பிடமும் ஆண்டவனுக்கு இல்லை என்பதற்காகப் புலவர் இப்படிக் கூறுகிறார்.



3. சோறு காணாத மூளி

கடவுளைக் கேலிபண்ணியவர்களிலே இரட்டைப் புலவர்கள் முக்கியமானவர்கள். ஒருவர் குருடர்-மற்றவர் முடவர். இந்த இரட்டையர் ஆங்கூரில் உள்ள சிவன் கோவிலுக்குச் சென்றிருந்தார்கள். அதிக நேரம் ஆகிவிட்டது. 'சாமி பிரசாதங்க'ளும் அவர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. வயிறு பசிக்கிறது. கையிலோ பணமில்லை. கோவில் உண்டைக்கட்டியோ எதிர்பார்த்தும் கிடைக்கவில்லை. புலவர்கள் (அந்தக் காலத்துப் புலவர்கள்) ஆண்டிகள் தாம்! எப்பொழுதும் பஞ்சைகள் தாம்! ஆண்டவனைப் பார்த்து ஒருவர்,

"தேங்குபுகழ் ஆங்கூர்ச்
சிவனே! அல்லாளியப்பா;
நாங்கள் பசித்திருக்க
ஞாயமோ?—"

என்று கேட்கிறார். இதைக் கேட்டுக்கொண்டிருந்தார் குருடர். ஆண்டவனிடம் போய்'பசிக்கிறது'என்று சொல்ல அவருக்கு விருப்பமில்லை. எந்த விஷயத்தையும் சொல்வதற்குரிய ஆள்பார்த்துத்தானே சொல்லவேண்டும்! 'தரமுடிந்தவரா? தருவாரா?' என்று ஒன்றுக்குப் பலமுறை யோசித்துத்தானே கேட்கவேண்டும்? எல்லாவற்றையும் எல்லோரிடமும் கேட்டுவிடக் கூடாதல்லவா? கோயிலில் இருக்கும் சாமிக்குச் சாப்பாடு எங்கே கிடைக்கிறது! சாப்பாடே காணாதவரிடம் 'சாப்பாடு' என்று கேட்கக்கூடாது. 'பசிக்கிறது' என்று

சொன்னால் பரிகாரம் ஏற்பட முடியாது! இதை உணர்த்த வந்த குருடர் முதல்வரைப் பார்த்து,

"—போங்காணும்
கூறுசங்கு தோல்முரசு
கொட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்!"

3745

என்று தன் ஏளனச் சிரிப்பைப் பாட்டாக்கி விட்டார். கோவிலில் இருக்கும் கல்லுச்சாமிகள் சாப்பிடுவதாகச் சொல்லிக்கொண்டு 'மடப்பள்ளி' என்ற பெயரால் ஒரு சமையலறை; 'சுயம்பாகி'கள் என்ற பார்ப்பனச் சமையற்காரர்கள்! இவ்வளவும் பார்ப்பான் தன் வயிற்றுக்காகத்தானே ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறான்? மடப்பள்ளி வைத்திருந்தாலும் ஆண்டவனுக்குச் சங்கோசையும், 'டமார'ச் சப்தமும்தானே! இதோடுகூட மணியோசையும் கேட்டாலும் கேட்கலாம். ஆண்டவன் பேரால், ஆண்டவனுக்குச் செய்யப்படும் ஒவ்வொரு உண்டைக் கட்டியும் பார்ப்பான் வயிற்றைத்தானே வீங்க வைக்கிறது? சாத்திரத்துக்சாகப் பிரசாதத் தட்டில் செங்கல்லை வைத்துத் தண்ணீர் தெளிக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆண்டவனுக்குச் செய்த புளியோதரையைக் காட்டாமல் கூடச் சாப்பிடுகிறார்கள் பிராமணர்கள்! புலவர் இந்தச் சுரண்டலை வெளிப்படுத்தத்தான் நையாண்டியாகப் பாடுகிறார். ஆண்டவன் கண்டது மணியடிக்கிற சப்தமும், முரசடிக்கிற சப்தமும்தானே என்று சொன்னால் அதன் உட்பொருளைச் சிந்திக்கவேண்டும்.

ஆண்டவனைக் காட்டிப் பகிரங்கமாக அரசியல் சட்டத்துக்கு அகப்படாமல், மக்கள் கையில் உதை வாங்காமல், பார்ப்பனன் ஏமாற்றுகின்ற ஓரிடம்தான் கோயில் என்பதனைப் புலவர்கள் அணு அணுவாக உணர்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்திலே மற்றவர்கள் மழைக்குக்கூட ஒதுங்க முடியாது.

4. சிரிப்புத்தான் தேவரீரே!

சிவபெருமான் பிச்சாடன மூர்த்தியாகக் கையில் திருவோடு ஏந்திப் பிச்சை எடுத்துண்டதாகப் புராணத்தில் ஒரு கதை. பிச்சாடன கோலத்துடன் சிவபெருமானைத் தேரில் வைத்து இழுத்துக்கொண்டு செல்கிறார்கள். யானை முன்னால் போகிறது. இன்னிசை எழுகிறது. முழவு அதிருகிறது. தூபதீபங்கள் அழகு படுத்துகின்றன. நமைகபோட்ட பக்தகோடிகள் நறுமணம் நிறக்க, நெற்றியிலே பூசும் நீற்றிலே 'செண்டு' தெளித்து அணிந்துகொண்டு வருகின்றனர். ஒரே ஆடம்பரமாக இருக்கிறது!

மேலே இருக்கிறவரோ பிச்சாடனமூர்த்தி! ஆம். பிச்சைக்காரப் பெருமான்!

இந்தக் காட்சியைக் காண்கிறார் காளமேகப் புலவர். சிரிப்பு வந்துவிடுகிறது. பிச்சை யெடுத்த பெருமானை 'உலா'வுக்கு அழைத்தவர்கள் இவ்வளவு அமர்க்களம் செய்கிறார்களே! ஆண்டவனையே பார்த்துக்கேட்கிறார்:–

நச்சரவம் பூண்டதில்லை
நாதரே! தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப்
புறப்பட்டும் — உச்சிதமாம்
காளமேன்? குஞ்சரமேன்?
கார்க்கடல் போல்முழங்கும்
மேளமேன்? ராசாங்க மேன்?

வேண்டுதல் — வேண்டாமையற்ற ஆண்டவனுக்கு, ஆடம்பரமில்லாத ஆண்டவனுக்குத் திருவிழாவா வேண்டும்? பிச்சைக்கார ஆண்டவனுக்கு இவ்வளவு பெருஞ் செலவிலா ஊர்வலம்! காசு கரியாகத்தானே போகிறது! அத்தனையும் வீண்தானே! ஆண்டவனுக்கு அதில் விருப்பம் உண்டு என்று எந்த உண்மைப் பக்தனாவது கூற முடியுமா? தன்னைவைத்துச் சிறு குழந்தைகள் விளையாடுவதுபோல, பொம்மை விளையாட்டு விளையாடு கின்ற பக்தகோடிகளின்மேல் உண்மையான பற்றுதல் ஆண்டவனுக்கு ஏற்படாதே! இது கோபத்தைத் தானே உண்டாக்கும்!

மற்றொரு புலவர் திருவிழாவைக் காணுகிறார். அவரும் ஆண்டவனைச் சும்மாவிடவில்லை.

ஒருவழியு மில்லாமல் மைத்துனனார் உலகத்தை
உண்ண லானார்
நரைமாடோ ஒன்றிருக்க உழுதுண்ண மாட்டாமல்
நஞ்சை யுண்டீர்!
இருநாழி நெல்லிருக்க இரண்டுமைந்தர் தாமிருக்க
இரந்தே உண்டீர்!
திருநாளும் உமக்கிங்கே தேவையெனில் சிரிப்புத்தான்
தேவ ரீரே!

என்று கேட்கிறார். "உனக்கு மட்டும்தான் சோற்றுக்கு 'லாட்டரி' என்று நினைத்தேன். உன் மைத்துனனாகிய கிருஷ்ணனுக்கும் சோற்றுக்கு லாட்டரிதானா? அவன் உலகத்தையே தூக்கிச் சாப்பிட்டிருக்கிறானே! சாப்பிடக் கூடியது எது என்றுகூடவா தெரியாது. அவ்வளவு பசியா!" என்று கேட்கிறார் புலவர் பரமசிவனின் மனைவியாகிய பார்வதிக்குத் தம்பி கிருஷ்ணன். ஆகையால் பரமசிவனுக்கு அவர் மைத்துனன் ஆகிறார். பரமசிவனுக்கு மட்டும் சோற்றுப் பஞ்சம் இல்லை. அவர் பெண்ணெடுத்த இடத்திலும் பஞ்சம்தான் என்று புலவர் புலப்படுத்துகிறார். அத்துடன் விட்டாரா? ஆண்டவனுக்குப

'பிழைக்கும் வழி'யைக் கூறுகிறார். "உடம்பிருக்கிறது. வலுவிருக்கிறது. நிலமிருக்கிறது. நிருக்குத் தலையில் கங்கையிருக்கிறது. உதவிக்குப 'பூத கணங்கள்' இருக்கின்றன. உழுவதற்கு மாடு ஒன்று இருக்கிறது. இப்படியெல்லா வசதியுமிருக்கும்போது சிவபெருமான் உழுதுண்டால் என்ன கெட்டுப்போய்விடும்?" என்று எக்காளமாகக் கேட்கிறார் புலவர். உழைக்காமல் தின்ன வேண்டுமென்றால் முடியாது. அதனால்தான் சிவபெருமான் நஞ்சையெடுத்து உண்டுவிட்டாராம்! சுருக்கமான வழி கண்டுபிடித்துவிட்டாராம்!

புலவர்களே பொல்லாதவர்கள். நஞ்சையுண்டதற்குப் புராணங்கள் என்னென்னவோ காரணம் கூறிக்கொண்டிருக்கும் போது, அவற்றை யெல்லாம் கொஞ்சம் கூடக் காதில் வாங்காமல் இவர்களுக்குத் தோன்றியதையெல்லாம் காரணமாகச் சொல்லுகிறார்கள்; நையாண்டி செய்கிறார்கள். 'சாப்பாட்டிற்கில்லாமல் சிவபெருமான் நஞ்சையுண்டார்' என்று சொன்னால் எந்தப் பக்தனாவது ஒப்புக் கொள்வானா? புராணங்களைப் படிக்காமலா இருப்பான்?

புராணங்களே பொய் மூட்டைகள் தாம். அவற்றை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது என்ன அவசியம்? நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு புலவர்கள் கிண்டல் செய்கின்றனர். அதன் காரணங்களைத் தூர எறிந்துவிட்டுத் தன் நையாண்டி வாதங்களைக் காரணமாக ஏற்றுகின்றனர்.

'இரண்டுமைந்தர்கள் இருக்கும்போது சிவபெருமான் பிச்சையெடுத்துண்ண வேண்டியிருக்கிறதே' என்று கவலைப்படுகிறார் புலவர். விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய இரண்டு மைந்தர்களும் அப்பனைக்காப்பாற்ற வகையற்றவர்களாக இருக்கிறார்களே என்று அவருடைய மைந்தர்களின மேலும் தன் சாட்டையை வீசுகிறார்! சிவபெருமானின் குடும்பமே இவரது பாட்டில் தத்தளிக்கிறது.

'திருத்தணிகை எனும் நகரத்தில் எழுந்தருளியிருக்கும் முருகனுக்கு முப்போகம் நெல் விளைகிறது. ஆறுமுகனுக்கு முப்போகம்விளைந்துநெல்வரும்போது அவரது அப்பன் பிச்சையெடுத்துண்ணுகிருரே' என்று இரட்டைப்புலவர் செய்த பாடலை இந்த இடத்தில் ஒப்பநோக்கலாம்.

"இப்பூமி தன்னில் இயல்பாம் திருத்தணியில்
முப்பூ விளையும் முருகருக்கே அம்மானை"

என்று கேட்கிருர் முதல்வர். இரண்டாவது புலவர்,

"முப்பூ விளையும் முருகருக்கே ஆமாயின்
அப்பனுக் கிங்கே அரிதாச்சே அம்மானை"

என்று கூறுகிருர். பிள்ளைக்கு எவ்வளவு விளைந்தாலென்ன! அப்பன் ஆண்டிதானே என்று சொல்லுகிருர் புலவர். எவ்வளவு எளிமையாகச் சொற்கள் விழுகின்றன! இதற்கு மறுமொழி எப்படிப் பகருகிருர் முதற்புலவர் என்று பாருங்கள்:

"அவர்க்கு முகம் ஆருனல் அரிதன்றே அம்மானை"

ஒரு முகம் இருந்தாலே அதிலுள்ள ஒரு சிறுவாய்க்கு மனிதன் எவ்வளவு போடவேண்டியிருக்கிறது. ஆறு முகம் இருந்தால் முப்போகம் விளைந்தால் என்ன? ஆறு போகம் விளைந்தால் என்ன! ஆறு வாய்க்கே அரிசி பற்ருதே! அப்படியிருக்க அப்பனை எப்படிக் காப்பாற்ற முடியும்?

மண்ணைத் தின்று பசியாறிய மைத்துனன், ஆறு வாய்க்கும் ஆறு வயிறுக்கும சோறுகாணுமல் இருக்கும் முருகன், குளக்கட்டைக்கு ஏங்கி வழிக்கரையில வயிறு வீங்கி உட்கார்ந்திருக்கும் பிள்ளையார்– ஆகிய இப்படிப் பட்ட உறவு முறையோடு இருக்கிருர் சிவபெருமான்.

அவர் ஒரு ஆண்டி! சோற்றுக்குத் தாளம் போடுகிற இவருக்குக் கொண்டாட்டம் எதற்கு? "அவர் கெட்ட கேட்டுக்குத் திருவிழா வேறு?" என்கிறார் புலவர்.

"திருநாளும் உமக்கிங்கே தேவையோயில் சிரிப்புத்தான் தேவரீரே!"

என்ற வரியைப்படிக்கும்போது நமக்கே சிரிப்புவந்து விடுகிறது. சிரிப்புமட்டும் வரவில்லை. ஆண்டவன் பேரில் இரக்கமும் உண்டாகிறது. இந்த வரியில் எந்த எழுத்தைத் தொட்டாலும் புலவரின் நகைப்பும் கிண்டலும் தெரிகிறது.



5. போர்முறை தெரியாதா?

ஒரு புலவர் சிவபெருமானின் போர்த்திறனைப் பற்றி நையாண்டி செய்கிறார். மூன்று வீரர்கள் இரும்புக் கோட்டை, வெள்ளிக்கோட்டை, தங்கக்கோட்டை ஆகிய மூன்று பறக்கும் கோட்டைகளை வைத்துக்கொண்டு மனிதர்களைத் துன்புறுத்தி வந்தார்களாம். அதற்கு அவர்களைத் தண்டிக்கும் பொருட்டுச் சிவபெருமான் கிளம்பினாராம். மேருமலையை வில்லாக வளைத்துக்கொண்டாராம். (மலையைத்தான் வில்லாக வளைத்தார்; கடலை வளைக்கவில்லை) பாம்பைக் கயிறாகக் கட்டிக்கொண்டாராம். இவ்வாறு அதிசயமான ('செப்பிடுவித்தை'க்காரன் போல்) ஆயுதங்களைச் சம்பாதித்துக் கொண்டு கிளம்பினாராம். சண்டைக்குக் கிளம்பிய சிவபெருமானையும் அவரது அற்புதமான ஆயுதங்களையும நினைத்துப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும். சர்வ வல்லமையுள்ள ஆண்டவன தன்னால் படைக்கப்பட்ட மூவர்களை அடக்குவதற்கு எப்படிச் சென்றிருக்கிறார்! நாடகத்தில் வரும் கோமாளிபோல் இருக்கிறதே சிவபெருமானின் கோலம்!

இந்தச் சண்டைக்குச் சென்ற சிவபெருமான், தன் அதிசய ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் அந்த வீரர்களைப்பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தாராம! அவ்வளவுதான் அவர்கள் சாம்பலாகி விட்டார்களாம். இது புராணத்தில் உள்ள கதை. இந்தக் கதையை அப்படியே ஒப்புக்கொண்டு தான் ஒரு புலவர் ஆண்டவனை நையாண்டி செய்கிறார்.

சொல்லுக்கினிய கழுக்குன்றரே!
  உமைச் சொல்ல வென்றால்
அல்லற் பிழைப்புப் பிழைத்து விட்டீர்!
    முப்புராதியர் மேல்

வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல்
நிரந்த வேளை தனில்
பல்லைத் திறந்துவிட்டீர்! இதுவோ
நும் படைத் தொழிலே!

ஆண்டவனுக்குச் சண்டை செய்யும் முறை, போர்க்கள நீதி தெரியவில்லை என்று புலவர் குறையை வெளிப்படுத்துகிறார். ஆயுதம் இன்னின்ன கொண்டு போக வேண்டும் என்று தெரியாமல் கொண்டு போனாராம்! வளைக்க முடியாத மலையை வில்லாக வைத்துக்கொண்டாராம். சொர சொரப்பாக இருக்கவேண்டிய நாண் 'வழ வழ' என்று இருக்கிறது. பாம்பை நாணாகக் கட்டிக் கொண்டால் எப்படியிருக்கும்? போர்க்களத்திற்குப் போனவுடன்தான் தான்கொண்டுவந்த அதிசய ஆயுதங்கள் காட்சிசாலைக்கு தவுமே தவிர எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்க உதவா என்று கண்டுகொண்டாராம். மலையை வளைத்து நாண் ஏற்ற முடியாமல் பல்லை இளித்துவிட்டாராம்!

'இதுவோ நும் படைத்தொழிலே' என்று புலவர் கேட்கும்போது ஆண்டவன் செய்யும் படைத் தொழிலும் அதன்முறையும் இவ்வளவு நகைப்புக்கிடமாக இருந்தால் மனிதன் படைத் தொழிலில் சில சமயத்தில் முறை தவறுவது இயல்புதான் என்று தோன்றுகிறது. 'உம்மைப் பாடவென்றால் அல்லற் பிழைப்புப் பிழைத்துவிட்டீர்' என்று புலவர் தன் கருத்தை வெளியிடுகிறார். ஒருவரைப் பாடவேண்டும் என்றால் அவர் ஏதாவது ஒருவழியில் சிறந்திருக்கவேண்டும். பாடல்பெறும் தகுதி இருக்க வேண்டும். இந்தப் புலவரோ ஆண்டவனுக்கு அந்தத் தகுதி இல்லையென்று வாய் கூசாமல் சொல்லி விடுகிறார். பழிக்கிடமான செயல்களே செய்திருக்கிறாராம். நல்ல பிழைப்பே பிழைக்கவில்லையாம். அவரது பிழைப்பெல்லாம் அல்லற் பிழைப்பாம்!

6. தொந்திக் கணபதி

சிவபெருமானுக்கு இரண்டு குழந்தைகள் என்று எழுதினவர்கள் அருளற்றவர்கள்; நேர்மையில்லாதவர்கள்! ஒரு குழந்தையை ஆபாசமாகப் படைத்துவிட்டு, மற்றொரு குழந்தையை 'மைனர்' போலப் படைத்துவிட்டார்கள். ஏன் இந்த வஞ்சகமோ தெரியவில்லை! எதற்காக இந்த மாதிரி அமைக்கவேண்டும் என்ற எண்ணம் ஓடிற்றோ? சிவபெருமானுக்குக்குழந்தை வரம் கொடுத்த அவர்கள், இரண்டு குழந்தைகளையும் ஒச்சமின்றி, அச்சுப் பதுமைகள் போலக் கொடுத்திருக்கலாம். விருப்பமில்லை போலும்!

அதிர்ஷ்டமில்லாத ஆண்டவன்!

அழகின்றித் தொப்பை வயிறும், தும்பிக்கையுமாய், மிருகத்திலும் சேர்த்தியில்லாமல், மனிதனிலும் சேர்த்தியில்லாமல் இருக்கிறார் பிள்ளையார். இவர் வடிவிலே 'கொடுத்து வைக்காதவராய்' இருந்தும், வழக்கிலே ஏதோ பெருமையைக் கொஞ்சம் ஈட்டி வைத்திருக்கிறார். இந்தப் பூவுலகிலும் சரி, தேவலோகத்திலும் சரி (ஏசு கிறிஸ்து, மகம்மது நபி முதலியோரின் சந்ததிகள் தவிர) இவரை வணங்கி விட்டுத்தான் எந்தக் கருமத்தையும் தொடங்கவேண்டும். ஒரு கருமத்தைத் துவங்கும் போது 'எண்ணித்துணிக' என்பதுதான் திருவள்ளுவரின் அறிவுரையாக இருந்தது; அவர் கால வழக்கமாகவும், அறிவுடையோர் பலரின் பொது வழக்கமாகவும் இருந்து வந்தது. இந்த நிலையில், பிள்ளையாரை வணங்கித்தான் எந்தக் கருமத்தையும் தொடங்குதல் வேண்டும் என்ற

அறிவுரையைச் சைவ சமயம் தமிழ்நாட்டிற்கு அறிமுகப் படுத்தி வைத்திருக்கிறது. 'எண்ணித் துணிந்தாலும இடையூறு இன்றி நடைபெற வேண்டின் கணேசனைத் துதி பண்ணித்துணிக', என்ற அருமையான உய்யும வழியைச் சைவ சமயம் காட்டியது. உய்யும் வழி நம்மைத் தொய்யும் வழிக்குத் தான் கொண்டுவந்தது. எண்ணித் துணிந்தாலும் நடக்காது என்று கூறிச் சிந்தனையிலும் ஆராய்ச்சியிலும் உள்ள நம்பிக்கையை மிகவும் குறைத்து விட்டது.

என்றாலும் இவ்வளவு தூரம் முன்னுக்குவந்து முதல் ஆதிக்கம் பெற்று இருக்கிறாரே இந்தப் பிள்ளையார், அது வரையிலும் அவருக்கு ஒரு 'யோகம், என்றுதான் சொல்லவேண்டும்.

கடவுள்களிலே சாப்பாட்டுக்கென்று பிறந்த கடவுள் இவர்தான். பால், பருப்பு, பாயசம், அவல், பொறி இப்படிப்பட்ட சில்லறைப் பண்டங்களிலே இவருக்கு விருப்பம் அதிகம். ஔவைக் கிழவி பாடியிருக்கின்ற பாட்டை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும். அந்தப் பாட்டை வைத்துக் கொண்டு பார்த்தால், இவர் ஒரு ஏமாந்த கடவுள் என்று கூட முடிவுக்கு வரலாம்.

பாலும் தெளிதேனும்
　　பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு
　　நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத்
　　தூமணியே! நீ எனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா.

ஔவையார் சமர்ப்பித்த இந்தப் பண்டமாற்று ஒப்பந்தம் மிக வேடிக்கையானது. பால் காலணா; தேன் காலணா; பாகு காலணா; பருப்பு காலணா - ஆக ஒரு அணாச் சரக்கைக் கொடுத்து ஒப்பற்ற தமிழைப் பெற்றுக்

கொள்ள விரும்புகிறாள்! பலே கிழவிதான் இவள்! பண்ட மாற்றுக்குச் சரியான ஆளும் பார்த்திருக்கிறாள்! கிழவி தன்னைக் கெட்டிக்காரியாக்கிக் கொண்டு தொந்தி வயிறனை ஏமாந்த சோணகிரியாக ஆக்கி விட்டாள். இவ்வளவு கடவுள்கள் இருக்கிறார்களே. அதுவும் சைவ சமயத்திலே கடவுள்களுக்கா பஞ்சம்! யாரும அகப்படாமல், பிள்ளையார் ஔவையின் ஒப்பந்தத்திற்கு ஆளாகியிருப்பதைப் பார்த்தால், இவர் பேரில் எனக்குக் கொஞ்சம இரக்கமாகத் தான் இருக்கிறது.

2

இவரை நன்றாகப் பாடின புலவர்களும் இருக்கிறார்கள். கேலியாகப் பாடிய புலவர்களும் இருக்கிறார்கள்.

இரட்டைப் புலவர்கள் ஒரு பிள்ளையார் கோயிலுக்குச் சென்றார்கள். முடவர் பிள்ளையாரைப் பார்த்தார். ஒரு அடி முன்னால் வந்த வயிறு அவரது கருத்தைக் கவர்கிறது. 'அடே யப்பா இவ்வளவு பெரிய வயிறாய் இருக்கே' என்று பெருமூச்சு வாங்கிவிட்டுப் பக்கத்திலிருந்தவரிடம்,

'சித்தம்பூர் வாழும் சிவனளித்த பிள்ளையார்
மெத்தப் பெருவயிறாய் வீங்கினர் காண் அம்மானே'

என்று சொன்னார். குருடர், 'ஐயோ பாவம்! எல்லோரும் கேலி செய்வார்களே' என்று நகைத்துக் கூறுவார்.

கண் கூடாகப் பார்க்கிறோம். ஒரு மனிதனுக்கு இரண்டு கைகள், இரண்டு கண்கள் - இப்படி இருக்க வேண்டிய முறைப்படி இல்லாமல், மாறுபட்டிருந்தால், அதைக் குறையாக நினைக்கிறோம். வயிறு பெருத்துத் தொந்தி தள்ளியிருந்தால், 'வயித்தைப் பாரு வண்ணாஞ் சாலுமாதிரி' என்றெல்லாம் பிறர் கிண்டல் செய்கிறார்களல்லவா? குறை எங்கிருந்தாலும், மனிதன் நையாண்டி செய்யப் பயப்படமாட்டான். கடவுளாயிருந்தால் என்ன! மனிதனிடத்திலே குறையென்று கருதப்படுபவை அவர்

டத்திலும் இருக்கப்படாதல்லவா? இருந்தால் இத்தரையில் ஏச்சுத்தானே அந்தக் கடவுளுக்குப் பரிசாகக் கிடைக்கும்?

'மெத்தப் பெருவயிருய் வீங்கினரே யாமாயின்
இத்தரையின் மீதவருக் கேச்சன்ரே அம்மானை!'

பிள்ளையாரின் நிலைக்குக் கவலைப்படுவதுபோல் குருடர் கூறுகிருர். வானுலகத்துத் தேவர்கள் ஒருவேளை வணங்கினுலும் வணங்கலாம். இந்த உலக மக்கள் கட்டாயம் கேலி செய்துதான் தீருவார்கள். 'இத்தரையின் மீதவருக்கேச்சன்ரே' என்று கூறுவது நையாண்டி போலவும் இரக்கப்படுவது போலவும் விரிகிறது. இந்தத் தரையில் ஒருவேளை சைவ சமய மக்கள் சும்மாயிருந்தாலும் இருந்து விடலாம், நம்முடைய கடவுளை நாமே கேலி செய்யக் கூடாதே என்பதற்காக. ஆனல் மற்ற சமயத்தார்கள் சும்மா இருப்பார்களா? 'உங்க சாமி வயித்தைப்பாரு அண்டாச் சட்டி மாதிரி' என்று கேலிசெய்வார்களே! இப்படிக் குருடர் கூறியதற்கு முடவர்,

'இரவு பகல் குட்டுணிக்கு ஏச்சுண்டோ அம்மானை'

என்று ஒரே வரியில் ஒரே அடியில் முடித்துவிடுகிருர். "ஏதாவது நெஞ்சிலே, நினைவிலே தைத்தால் தானே!" என்கிருர்.

ஒரு மேலாள், தனக்குப் பணியாட்களாக இருப்பவர்கள் மரியாதை செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பான். பணியாட்களுக்கு மேன்மைப்படுத்த விருப்பமில்லாவிட்டாலும் கீழ்மைப் படுத்தாமலாவது இருக்கலாம். இவ்வாறின்றிப் பணியாட்கள் நையாண்டி செய்யும் நிலையில் தாம் இருப்பதை உணராமலும், அடக்காமலும் இருக்கலாமா? மானம், ரோஷம் ஏதாவது இருந்தால் சும்மா இருக்க முடியுமா? ஒன்று அவர்களை அடக்குவான் அல்லது இயலாமைக்காகத் தூக்குப்போட்டுக்கொண்டாவது சாவான். இவ்விரண்டும் செய்யாவிட்டால் அவன் பேமானி தானே!

உள்ளம் - உணர்ச்சி ஏதாவது இருந்தால் இந்தப் பிள்ளையார் இப்படியிருப்பாரா? எச்சுக்குப் பயப்பட மாட்டாரா? இந்தச் சந்தேகங்களுக்கு எவ்வளவு இழுப்பான மொழியில் விடையிறுக்கிறார் இந்தப் புலவர். "அந்த ஆளுக்கு ஏதய்யா மானம்?" என்று கூறுவது போல இவர்பிள்ளையாரைப் பேமானியாக ஆக்கிவிட்டார்.

இன்னொரு புலவர் இந்தப் பிள்ளையாருக்குத் திருட்டுப் பட்டமே சூட்டிவிடுகிறார்.

விக்கினேசுவரராகிய இந்த விநாயகரிடமும் ஒரு சமயம் இவர் தன் பண முடிச்சை அவிழ்த்து வைத்து விட்டுக் குளிக்கச் சென்றார். குளித்துவிட்டு வந்து பார்க்கையிலே அம்முடிச்சைக் காணோம். யாரோ பார்த்திருந்து முடிச்சை 'அடித்துக்' கொண்டு போய் விட்டான். இது கண்டு மனம் வெந்த புலவர் பிள்ளையாரைத் திட்ட ஆரம்பித்து விடுகிறார் "நீர்தான் திருடிக் கொண்டீர்" என்று. ஐயோ பாவம் - பிள்ளையார்மீது குற்றம் சாட்டுகிறார். பிள்ளையார் திருடினார் என்று சொல்ல வந்த புலவர், "யாரும் இப்படிச் சொல்வதிலே ஆச்சரியப்பட வேண்டாம். இதுபோன்ற ஈனமான தொழில்கள் இவரது கோத்திரத்தின் குணம்தான்." என்று ஒரு போடு போட்டு விடுகிறார்.

தம்பியோ பெண்திருடி!
　　தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடி
　　மாமாயன் - அம்புவியில்
மூத்த பிள்ளை யாரே
　　முடிச்சவிழ்த்துக் கொண்டீரே!
கோத்திரத்துக் குள்ள குணம்!

'பெண், பொன் - ஆக இந்த இரண்டும்தான் உலகம். இவற்றை அடைவதிலே தவறான குறுக்கு வழிகளைக் கையாளுபவன் நல்ல பெயரெடுப்ப தில்லை. வேடர் குலப்

பெண்ணை அவர்களுக்குத் தெரியாமல் கொண்டுவரப் பார்த்தான் முருகன். ஆனால் அந்தத் திருட்டிலே அகப்பட்டுக் கொண்டு சண்டைபோட வேண்டிய அளவுக்கு வளர்ந்து 'வள்ளிதிருமணம்' ஆனகதையைக் கேட்டிருக்கிறோம். இப்படி பெண் திருட்டிலே சம்பந்தப் பட்டவர், பிள்ளையாரின் தம்பி முருகக்கடவுள். இடையர் வீட்டிலெல்லாம் புகுந்து நெய்திருடி உண்டார் கண்ணபிரான். கண்ணபிரான் பிள்ளையாருக்கு மாமன் முறையாகிறார். "தம்பி' மாமன் ஆக எல்லோரும் திருடியதுபோல நீரும் திருட ஆரம்பித்து விட்டீர்" என்று புலவர் தன் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாகப் பரம்பரைப் 'பெருமைகளை' எடுத்து அலச ஆரம்பித்து விட்டார்.

யாரோ எடுத்துக் கொண்டு போனதிற்கு இவர் கடவுளைப் பிடித்துத் திட்டுகிறாரே என்று எனக்கு முதலில் தோன்றிற்று!

பிள்ளையார் கடவுள் அல்லவா? யாருக்கும் இன்னல் வராமல், எடுத்த கருமம் இனிது முடிய அருள் தொடுத்து நிற்பவரல்லவா! அப்படியானால் அவரிடம் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட பொருளைக் காத்து அடியாரிடம் கொடுக்கவேண்டியதுதானே முறை! வைக்கும் போதும் வாயை மூடிக் கொண்டிருந்துவிட்டு, திருடன் எடுத்துக் கொண்டு ஓடும் போதும் வாயைமூடிக் கொண்டிருந்தால் அவரைக் கடவுள் என்று எப்படிச் சொல்ல முடியும்? கல்தானே அப்படியிருக்கும்! பிள்ளையாரைக் கல் என்று முடிவு செய்து கொண்டு அவரைச் சும்மா விட்டுவிடவில்லை புலவர். திருநீலகண்ட நாயனாரிடம் ஒரு பிச்சை ஓட்டைக் கொடுத்து விட்டு, இந்தக் கடவுளின் தகப்பனார் என்ன பாடுபடுத்தினார்! அந்த நாயனார் பட்டபாடு கொஞ்சமா?

ஆனால் உண்மையை ஆதாரமாக வைத்துக் கொண்டு, நாட்டு நடப்பை வைத்துக் கொண்டு பார்த்தால், புலவர் மேல்தான் குற்றம். கோயில்களில் இருப்பதையெல்லாம் கடவுள் என்று நினைக்கலாமா? அவை

கற்கள் தாமே! கற்களிடம் அடைக்கலமாகப் பணத்தை வைத்துவிட்டு, அதைப் பத்திரமாகத் திருப்பி வாங்கி விடுவோம் என்பது என்ன நிச்சயம்! இந்தப் புலவரின் பாடலும் நிகழ்ச்சியும் "கற்கள் தாம் கடவுள்களாய் இருக்கின்றன. அவற்றை உண்மையான கடவுள்கள் என்று நம்பி என்னைப் போல் வீண் மோசம் போய் விடாதீர்கள்" என்ற உட்கிடையைப் புலப்படுத்துகின்றன அல்லவா?

இரட்டைப் புலவர்கள் இதை வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறார்கள். இந்தக் கருத்தை அவர்கள் கடவுள்களின் வாயிலிருந்து வருவதாகவே பாடலில் அமைத்திருக்கின்றனர். கடவுள்களைப் பார்த்து,

"கேட்ட வரமளிக்கும்
கீர்த்தியுள்ள தெய்வங்காள்!
கூட்டோடும் எங்கே
குடிபோனீர்?"

என்று கேட்கின்றனர். கேட்டதைக் கேட்டபடி கொடுக்க வல்லன தெய்வங்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அப்படிச் சொல்லிக் கொள்ளும் புகழ், அதாவது கீர்த்தி, வழக்காற்றில் பழகி வந்திருக்கிறது. அத்தகைய உயர்வுடைய தெய்வங்கள் இன்று அச்சக்திகளை எங்கு பறி கொடுத்தன! ஏன் பறி கொடுத்தன? நமக்குத் தோன்றக் கூடிய இதே ஐயங்கள் புலவர்களிடத்தும் தோன்றியிருக்கின்றன. தெய்வங்களிடமே கேட்கிறார்கள். "இந்த உலகத்தை விட்டுத் தெய்வாதிகளே, 'டோரா'வைக் கிளம்பிக் கொண்டு எங்கே சென்று விட்டீர்கள்?" என்கிறார்கள். தெய்வங்களே மறுமொழி கூறுகின்றன.

"— — —பாட்டாய்கேள்:
செல்கால மெல்லாம்
செலுத்தினோம்; இக்காலம்
கல்லானோம் செம்பானோம் காண்!"

என்று கூறிவிடுகின்றன. இப்பொழுது கற்சிலைகளாகவும் செப்புச்சிலைகளாகவுமே கடவுள் இருக்கின்றன.

எல்லோரும் கோவில்போய்த் திரும்பும் முறைவேறு. இந்தப் புலவர்கள் சென்று திரும்பும் முறை வேறு. மற்றவர்கள் கல்லினுள்ளே இருப்பது தெய்வந்தான் என்ற முழு நம்பிக்கையுடன் சென்று, உள்ளம் உருகி, ஆனந்த வெள்ளத்தில் பரவசமாகி, தேவாரம் பாடித் திருவாசகம் ஓதித் திரும்புவார்கள். இவர்களோ கிண்டலாகப் பாடிக் கொண்டு வெளியேறுவார்கள்.

குப்புறக்கிடத்தி, அவசரத்திற்கு வேட்டி துவைத்தால், கல்லான, செம்பான பெருமான்களால் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது! நெற்றிக் கண்ணைக் காட்டிச் சுட்டெரித்துவிட முடியாது! நமமைச் சாம்பலாக்க முடியாது! கும்பாபிஷேகம் செய்து, அவற்றின் மீது பாலாபிஷேகம் செய்தாலும், அவற்றிற்காக, அவற்ருல் மனம மகிழ முடியாது. கடைக்கண் திறக்க முடியாது. அவை கற்கள்! அவற்றின் மான்மியங்களெல்லாம் பழங்கீர்த்திகள்! பழங் கதைகள்!

நான் பள்ளியில் பயின்றபோது என் நண்பர் ஒருவர் ஆசிரியரைக் கேட்ட ஐயம் இப்போது நினைவுக்கு வருகிறது. "ஆண்டவன் என்று சொல்கின்றீர்களே; இப்பொழுது ஆளவில்லையா? 'ஆண்டவன்' என்று இறந்த காலத்தில் இருக்கிறதே" என்று கேட்டார். அப்பொழுது நினைவிலிருக்கும்படியான விடையை ஆசிரியர் சொன்னதாக எனக்கு நினைவில்லை. ஆனல் எனது நண்பரின் கேள்விக்கு இரட்டைப் புலவர்களின் பாட்டுத்தான் சரியான மறுமொழி என்று இப்பொழுது படுகிறது.

'எங்கள் காலம் மலையேறிவிட்டது' என்று தெய்வங்கள் ஆற்றமாட்டாமல் கூறுகின்றன. 'கல்லாளும் செம்பாளும் காண்' என்று கூறும்போது, அவற்றின் நிலைக்காக நாம் கண்ணீர் உதிர்க்க வேண்டியிருக்கிறது. உலகத்தைப் படைக்கும்பொழுது தெய்வங்கள் தம் ஆட்சி

யைச் செலுத்தியிருக்கலாம். மனிதனைப் படைத்திருக்கலாம. ஆனால் இப்பொழுதோ மனிதன் தான் முழுக்க முழுக்கக் கடவுளாக இருக்கிருன். அவன்தானே இப்பொழுது கடவுள்களைப் படைக்கிருன்? தன்னைப் படைத்த குற்றத்திற்காகவோ, என்னவோ, எண்ணற்ற கடவுள்களைச் செம்பிலும், சிலையிலும் செதுக்கிய வண்ணம் இருக்கிருன்!

கடவுள்களின் ஆட்சி இந்தக் கலியுக மனிதனிடம் செல்லவில்லை! ஐயோ பாவம்!

3748



7. பெருமாளும் நல்ல பெருமாள்

சைவசமயத்துச் சாமிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாகனம் தரப்பட்டிருக்கிறது. இந்த வாகனங்களின் 'லிஸ்டை' நாம் படித்துப் பார்க்கவேண்டும். பெருச்சாளி மேல் ஒன்று, மயில் மேல் ஒன்று, நாயின்மீது ஒன்று, பருந்தின்மீது ஒன்று, மாட்டின் மீதொன்று — இப்படி வரிசையாகச் சொல்லிக்கொண்டே போகலாம். இந்த நாட்டில் கண்ட எல்லா மிருகங்களுக்கும், கடவுள்களுக் கும் ஏற்கும் உரிமையும், ஏறும் உரிமையும் கொடுக்கப்பட் டுள்ளன. கங்காரு, யாக் எருமை, ஒட்டகம் முதலியன இந்த நாட்டில் இருந்திருந்தால் அவைகளும் ஏதோ ஒரு ஆண்டவனைச் சுமக்கவேண்டியிருந்திருக்கும். நல்லவேளை! உலகத்தில் பல மிருகங்கள் இந்து மதத்தினரின் கண் ணில் படாமல் தப்பிப் பிழைத்துவிட்டன.

●

காளமேகப் புலவர் ஒரு பெருமாள் கோவிலுக்குச் சென் றிருந்தார். அங்கு திருவிழா நடந்துகொண்டிருந்தது. பெருமாள் கருடன்மீது ஏற்றப்பட்டிருந்தார். தேடித் தேடி இந்த ஆண்டவனுக்குக் கருடன் தானா வாகனமாக அகப்பட்டது! அவருக்கு நகைப்பாகவே இருந்தது. இதை மனத்தில் வைத்துக்கொண்டு/பெருமாளின் வாக னப் பெருமையைக் கேலிசெய்ய ஆரம்பிக்கிறார்:

"பெருமாளும் நல்ல
  பெருமாள்! அவர்தம்
திருநாளும் நல்ல
  திருநாள்! — பெருமாள்

இருந்(து)இடத்தில் சும்மா
இராமையினால் ஐயோ
பருந்தெடுத்துப் போகிறதே பார்!"

என்று பாடி முடிக்கிறார்.

ஒரு பறவை. அதற்கு மேலே பெருமாள். பக்தர்கள் புடைசூழ ஊர்வலம் நடக்கிறது. இதைப் பார்க்கிறவர், 'பெருமாளும் நல்ல பெருமாள்!' என்று இரக்கப்படுவதுபோல் சொற்களை எடுக்கிறார். 'அவர் தம் திருநாளும் நல்ல திருநாளாக இருக்கிறது' என்று நையாண்டியாகச் சொல்லுகிறார். காரணம் என்ன தெரியுமா? கருடன் அவரை அடித்துக்கொண்டு போகிறதாம். ஏறி அமர்ந்திருக்கிற பெருமாளை, கருடன் அடித்துக்கொண்டு போகிற கழிந்த பொருளாக நினைக்கிறாரே புலவர். என்ன நெஞ்சழுத்தம்! 'ஏன அடித்துக்கொண்டு போகிறது?' என்ற கேள்வியும் கேட்டு, அதற்காகப் பரிதாபமும் கொண்டு, கடைசியில் பெருமாளுக்கே ஒரு 'டோஸ்' கொடுக்கிறார். "இருந்த இடத்திலே இருந்து தொலைத்திருந்தால் இவ்வளவு தொல்லை வருமா? ஏனய்யா கோயிலைவிட்டு வெளியே கிளம்புகிறீர்? அதனால் தானே பருந்து அடித்துக்கொண்டு போய்விட்டது. உமக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்!" என்று சிரிக்கிறார் புலவர். இருந்த இடத்திலே இருந்தால் வாகனம் தேவைப்படாதல்லவா?

'நல்ல 'பெருமாள்" என்று இழுப்பாகக்கூறி 'நல்ல திருநாள்!' என்று அதைத் தொடர்ந்து தொடுப்பாகப் பாடிப் புலவர் ஒரே 'அமர்க்களம்' செய்கிறார்.

8. சீரங்க நாதர்

என் தோழர்கள் பலர் சீரங்கநாதனின் மீதும் தில்லை நடராசனின் மீதும் பாட்டொன்று பாடியிருந்ததை நான் கேட்டிருக்கிறேன். அதிகமான பக்தி காரணமல்ல; 'அப்படியானால் நாஸ்திகமா?' என்று கேட்டால் ஒருவேளை யிருக்கலாம் என்றுதான் சொல்வேன். நம் நாட்டுக் கடவுள்கள் பாடல்பெற்றவர்கள். மற்ற நாட்டுக் கடவுளர்கள் செய்த பாக்கியத்தைக் காட்டிலும் இந்த நாட்டுக் கடவுளர்கள் பாக்கியசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும். இசையோ, வசையோ ஏதோ ஒன்று எல்லாக் காலத்திலும் இந்தச் சாமிகளுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன என்பதற்காகவே எனது நண்பர்களின் பாட்டை இங்கு காட்ட நினைக்கிறேன்:

"சீரங்க நாதரையும்
தில்லை நடராசரையும்
பீரங்கி வைத்துப்
பிளக்கும்நாள் எந்நாளோ?"

என்பதுதான் அந்தப் பாட்டு. இது வெட்ட வெளிச்சமாக வந்த 'சுயமரியாதை' நாதம்! சீரங்கநாதனும் கல்; தில்லை நடராசனும் கல். 'கற்களே கடவுள்களாக இருக்கின்றன' என்ற பாலபாடம் என் நண்பர்களுக்குத் தெரியாமலா போகும்? அதனால்தான் அவற்றைப் பிளக்கப் 'பீரங்கி'யை உபயோகப்படுத்த நினைக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும் சீரங்கநாதனாலும், தில்லைநடராசனாலும் 'எள்ளை அசைக்கவும்' ஏலாது என்று! இந்த இரண்டு இடங்களும் ஏமாற்றுகின்ற

இனத்தினருக்கு, 'மதம்' என்னும் வியாபாரக் கம்பெனிக்கு இரண்டு 'ஹெட் ஆபீஸ்'களாகும். தமிழ்நாட்டைத் தகர்த்து, உள்ளுக்குள்ளே அரித்துவரும் கூட்டத்தார் காட்டும் புண்ணிய ஸ்தலங்களாகும்; இந்த இடத்தில் பீரங்கிவைத்துப் பிளக்கும் வேலை முடியாதாகும். அதனாலேதான் என் நண்பர்களின் பாட்டிலே "எந்நாளோ?" என்ற ஏக்கமான சொல் விழுந்திருக்கிறது. ஏமாற்றுபவர்கள் அந்தப் பீரங்கியின் முன் வர மாட்டார்கள். அந்தப் பீரங்கிக்கு முன்னர் ஏமாறும் நம்மவர்களையே அவர்கள் நிறுத்திவைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தச் 'சாணக்கிய வேலையை' முறியடித்து நம பீரங்கி தன வேலையைத் துவக்கவேண்டும்.

நிற்க. நண்பர்களின் பாடலிலிருந்து நாம் திரும்பவும் இடைக்காலச் சுயமரியாதைப் புலவர்களின் பாடல்களில் கருத்தைச் செலுத்துவோம்.

●

இரட்டைப் புலவர்கள் இந்தச் சீரங்கநாதன் தூங்கும் நிரந்த தூக்கத்தைக் காண்கின்றனர். பக்கத்தில் ஐந்துதலை நாகம் படம் விரித்து நிழல் கொடுப்பது அவர்களுக்குத் தெரிகிறது. பாம்பு பக்கத்தில் இருப்பது அவர்களிடத்தில் ஒருகற்பனையையும்குறும்பையும் கிண்டிவைக்கிறது. உடனே ஒரு சந்தேகம். உண்மையான சந்தேகமல்ல; "எத்தனையோ காலமாக விழுந்த இடத்திலே கிடந்து தூங்குகிறாரே! உண்மையிலேயே தூங்குகிறாரா? அன்றி இறந்து 'சவ'மாகக் கிடக்கிறாரா?" என்று கேட்கிறவர், அடுத்தவரைப் பார்க்கிறார்:

"அடுத்ததிருக் காவிரிசூழ்
அளிஅரங்கர் எப்போதும்
எடுத்ததிருக் கோயிலைவிட்
டெழுந்திரார் அம்மானை!"

என்கிறார். இதைக்கேட்ட அடுத்தவர்,

"எடுத்ததிருக் கோயிலைவிட்
டெழுந்திரார் ஆமாயின்
படுக்கையில் விடம்தீண்டிப்
பட்டனரோ அம்மானை?"

என்று அவரது கேள்வியை ஒப்புக்கொண்டு ,தன் மறு மொழியைச் சந்தேகமாக்கி விடுகிறார். இதைக் கேட்ட முதல்வர், "பாம்புதான் கடித்திருக்கவேண்டும்" என்று அமைதி கொள்ளுகிறார்:

"பட்டனரென்(று) அன்றோ
பருந்தெடுத்த தம்மானை!"

என்ற அடிகளை இரண்டாமவரின் சந்தேகமான மறு மொழிக்குச் 'சந்தேக நிவர்த்தினி'யாக ஆக்கி அனுப்பி வைக்கிறார்! பெருமாள் செத்துவிட்டாராம்; பிணமாகி விட்டாராம். அதனால் பருந்தெடுத்துக்கொண்டு போகிறதாம்! சரியான "சோடிப்பு வேலை!"

'சும்மா கிடக்கிறாரா......... எழுந்திருக்காமல் கிடக்கிறாரே' என்று தொடங்கி, 'பாம்புகடித்துவிட்டது' என்று காரணம் கூறி, அதோடு விடாமல் 'செத்த பிணம், ஆகையினால் பருந்தடித்துக்கொண்டு போகிறது' என்று முடித்துவிட்டனர்.

பொல்லாத புலவர்கள். 'சோடிப்பு வேலை'யில் கைதேர்ந்தவர்கள். ஆண்டவன் படாதபாடு படுகிறார்!

9. மனிதன் சிறந்தவன்

புலர் தெய்வங்களிடம் அதிக நம்பிக்கை வைத்துத் தன்னம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். பிள்ளை பெறுவதற்கும் ஆண்டவன் உதவி தேவையிருக்கிறது! பையன் பரீட்சையில் 'பாஸ்' செய்வதற்கும் ஆண்டவன் உதவி செய்யவேண்டியிருக்கிறது! தன காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் 'தன்னல' நோக்கத்துடன் பாமர மனிதன் கடவுளை வணங்கிக்கொண்டிருக்கிறான். ஒவ்வொருவனும், கடவுளிடம் ஏதோ கைமாறை எதிர்பார்த்துக்கொண்டே வணங்குகிறான். ஆனால் கடவுளோ இதை ஏறிட்டும் பார்ப்பதில்லை. (எதைத்தான் அவர் ஏறிட்டுப் பார்க்கிறார்?) கடவுளுக்கு என்று செலவழிக்கும் நேரத்தில் கால்மணி நேரத்தை—அவருக்கெனப் பாடப்படும் தேவார—திருவாசகப் புகழ்களிலே நூற்றில் ஒரு பங்கை ஒரு மனிதனிடம் போய்ச் சொன்னால் அந்த மனிதன் உள்ளபடியே வேண்டியதைச் செய்ய முன் வருவான். 'மிதிமிகுந்தவன் பொற்குவை' தருவான். ஆண்மையாளர்கள் தங்கள் உடலாலான உதவியை நல்கத் தயாராக இருப்பார்கள். அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளுவார்கள். இப்படி மனிதன் ஏதாவது இயன்ற கைமாறைச் செய்யத் தவறமாட்டான். மனிதன் பொல்லாதவனல்ல. அவன் நல்லவன். அவனால் எல்லாம் ஆகக்கூடும். பரீட்சைக்குப் படிக்கும் பையன் பக்கத்தில் இருக்கும் பையனை நம்பினாலும் அது வீண் போகாது என்றுதான் சொல்லுவேன்.

எது எப்படிப் போனாலும் போகட்டும் - மனிதன் ஆண்டவனைக் காட்டிலும் கொடுத்துக்காப்பதிலே சிறந்த

வனாக இருக்கிறான். கடவுள்களிலே ஆக்குவதற்கு, காப்பதற்கு, அழிப்பதற்கு என்று மும்மூர்த்திகள் இருக்கிறார்கள் என்று சொல்லக் கேட்கிறோம். மும்மூர்த்திக ளின எல்லா அம்சங்களும் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கின்றன. மனிதன் இப்பொழுது கண் கண்ட தெய்வமாக இருக்கிறான்.

●

சூப்ரதிபன் என்றொரு புலவர், தம்மை ஆதரித்த புரவல னிடம மிக அன்பு பாராட்டி வந்தார். அவன் பெயர் குன்னரங்கன். திடீரென்று அவன் இறந்துவிட்டான். புலவர் கலங்கினார். அவனது ஈமச் சடங்குகள் நடந்துகொண்டிருக்கும்போது அங்கு போய்ச் சேருகிறார். "இனி யார் தனக்குக்கொடுத்துக் காப்பதற்கு இருக்கிறார் கள்?" என்று உள்ளூற வருத்தம் அதிகரித்தது. "தமிழ்" என்று சொன்னால் ஓடிவந்து ஆர்வத்துடன் படித்துக் காட்டச் சொல்லுவான். அதன் சுவை தேர்ந்து மெச்சு வான். வேண்டிய பொருள் கொடுத்துப் புலவரை ஊக்கு விப்பான். அப்படிப்பட்டவன் இறந்துவிட்டால் துக்கம வராமல் இருக்குமா?

"குன்னரங்கன் போனால் என்ன? திருவரங்கன் இருக் கிறான்" என்று அவரால் மகிழ்ச்சி அடையமுடியவில்லை! 'கடவுள்கள் காப்பவர்கள்' என்பது ஏட்டளவில்தான் என்பது ஒரு எழுத்தாளனுக்குத் தெரியாமல் இருக்க முடியுமா? குன்னரங்கனின் உயர்வுக்கு எந்தக் கடவு ளுமே ஈடாகமாட்டார் என்பது அவரது துணிவு. 'சீரங் கத்து ஆண்டவன் செய்வதைக் காட்டிலும் குன்னரங் கன் செய்து காத்தான்' என்று கூறுகிறார் புலவர். அத னால் குன்னரங்கனையே பாடுவேன் என்கிறார்.

"தென்னரங்கன் அரங்கனென்பார்
வாய்திறவான்; கண்விழியான்;
திரும்பிப் பாரான்!

என்னரங்கன்! தூங்கரங்கன்

ஏழையர்க்குக் கருணையினல்

இரங்கா ரங்கன்!''

என்று பாடுகிருர். குன்னரங்கனை உயர்த்திப் பாட வந்தவர் சிரங்கநாதனை வேண்டுமென்றே மட்டம் தட்டுகிருர். தென்னரங்கனை வாழ்த்த விருப்பமில்லாவிட்டாலும், தூற்ருமலாவது இருக்கலாம்! புலவர் அப்படியிருக்கவில்லை. சிரங்கநாதனைச் செயலற்றவன் என்று எடுத்துக் காட்டி, குன்னரங்கனின் பெருமையை ஒப்ப வைத்து நோக்கச் சொல்லும்போது அந்த வள்ளலின் பெருமை புலவனின் நினைப்பைக் காட்டிலும் மிகவும் உயர்ந்துவிட்டது. பாட்டில் கவி தான் நினைத்ததைக் காட்டிலும் அதிகமான செயலமைப்பையும் வெற்றியையும் கண்டுவிட்டான்!

"வாயைத்திறக்க முடியாது; கண்விழித்துப் பார்க்க முடியாது, திரும்பிப் புரண்டு படுக்கமுடியாது. யார்வந்திருக்கிருர்கள; யார பக்கத்திலே நிற்கிருர்கள்? யார் தன்னைவைத்து ஏமாற்றுகிறவர்கள் என்று பார்க்க முடியாது, தூங்கிக் கொண்டே செயலற்றுக் கிடப்பது. இவ்வளவு குணமும் ஒரு கல்லுக்குத்தானே இருக்கும்? கல்லாயிருக்கிற அரங்கன் என்ன அரங்கன்! சுகமில்லாதவன்!" என்று புலவர் சொல்லி விடுகிருர்.

பலகடவுள்கள் இருக்கையில் புலவர் திருவரங்கனை எடுத்துக் கொண்டதற்குக் காரணம் இருக்கிறது. திருமால்தானே காப்பதற்குக் கடவுள் என்று புராணம் கூறுகிறது! அப்படிக் காப்பதற்குரிய கடவுளையே புலவர் பிடித்துக் கொண்டதிலே பொருள் இருக்கிறது.

'ஏழையர்க்குக் கருணையினல் இரங்கி அருள் புரியாமல் கிடக்கின்ருரே!' என்று புலவன் மெய்யாகவே வருந்தி, வருந்திப் பின்னர் எக்களிப்பாகக் கூறிய சொற்கள்தாம் அவை.

ஆகவே கடவுளைக் காட்டிலும் உயர்ந்த குன்னரங்கனிடம் சென்றதாகப் புலவர் கூறுவது பொருத்தம் தானே!

"மன்னரங்கன் தமிழ்ப்பெருமான்
மழவரங்கன் அளித்தருளும்
மைந்த னை
குன்னரங்கா; எனக்கிரங்காய்!
கொண்டுவந்த தமிழ்க்கிரங்கிக்
குழைந் தெழாயே!"

என்று பாடுகிறார்; 'தமிழுக்காகவாவது உயிருடன் வாழ்' என்று புலவர் குன்னரங்கனைப் பார்த்துக் கூறுகிறார். ஆனால் அவன்தான் இறந்து விட்டானே!



10. கடவுள் படும்பாடு

"இந்த உலகம் யாராலும் ஆக்கப்பட்ட பொருளல்ல; அது தானே உண்டானது. கடவுள் என்று ஒருவர் இல்லை. அவ்வாறு இருப்பதாக ஒப்புக் கொண்டால் அவருக்கு அறிவில்லை; அருளில்லை; என்றுதான் கூறுவேன்." இப்படிக் கூறுபவன் நாஸ்திகன்.

"கடவுள் ஒருவர் உண்டு; அவரால் ஆக்கப்பட்டதே இந்த உலகம். ஒவ்வொரு அணுவும் அவரால் இயக்குவிக்கப்படுகிறது." என்று சாதிப்பவன் ஆஸ்திகன்.

∴ ∴ ∴

ஆஸ்திகன் - நாஸ்திகன் ஆகிய இவர்கள் இரண்டு தத்துவ ஞானிகள். ஒன்றைப் பற்றியே சிந்திப்பவர்கள்; ஒன்றைப் பற்றியே வாதாடுபவர்கள். ஆனால் வேறு வேறு இடத்திலிருந்து தங்கள் வாதத்தைத் துவங்குகிறார்கள். ஒன்றுக்கொன்று நேர்மாறான திசையிலிருந்து கிளம்பினாலும் நோக்கம் ஒன்றைப்பற்றியே விரிந்து கொண்டு போகிறது. ஆண்டவன் தன்னை நினைப்பவர்களுக்கெல்லாம் நற்பேறு தருவதாக வைத்துக் கொண்டால், நாஸ்திகனும் அப்பங்குக்காக வாதாடும் உரிமை உடையவனாகிறான் என்றுதான் சொல்லவேண்டும். தென் துருவத்திலிருந்து ஒருவனும் வட துருவத்திலிருந்து ஒருவனும் ஓரிடத்தை நோக்கிச் செய்யும் பயணத்தைப் போன்றது இது.

கடவுளின் அருளால் தோன்றுவதாகச் சொல்லப்படும் ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும்போதே ஆஸ்திகக்

குழந்தையாகப் பிறப்பதில்லை. பின்னர்தான் மனிதன், குழந்தைக்கு வளர்ந்தபின் மதம் என்பதனை அறிமுகப் படுத்துகிறான்.

உலகம் தோன்றிய அந்த நாளில் - ஒரு நாஸ்திக உலகமாகவே இருந்தது. கடவுளால் படைக்கப்பட்டது உலகம் என்று கொண்டால் கடவுளால் படைக்கப் பட்டது ஒரு நாஸ்திக உலகந்தான். அந்த வையத்தில் கடவுள் தேவைப்படவில்லை. அதனால் கோயிலில்லை. குருக்களில்லை. மனிதன் தன் உழைப்பை நம்பியே வாழ்ந் தான். 'ஆட்டுவித்தால் ஆடுகின்றேன்' என்று தன்னை நடத்துவிக்கும் சூத்திரக் கயிறு ஆண்டவனிடம் இருப்ப தாக எண்ணிக் கொண்டு, தன்னம்பிக்கையை இழந் திருந்த மெய்யடியார்கள் அப்பொழுது இல்லை. மனிதன் மிருகங்களுடனும், மழை, காற்று முதலிய இயற்கை நிலைகளுடனும் போராடித் தனைக் காத்துக் கொள்ள வேண்டியிருந்தும், தன்னம்பிக்கை தளராமல் இருந்தான். ஆண்டவனைத் துணைக் கழைக்காமலேயே அவனால் வாழ, முன்னேற முடிந்தது.

'இப்படியிருந்த நிலையிலே கடவுள் எப்படிக் காலடி வைத்தார்?' என்ற கேள்வி கேட்கப்படவேண்டியது. மனிதனின் சிந்தனையும் அறிவும் தொடக்க காலத்தை விட வளர்ச்சி அடைந்தன. இது உண்மை எனினும் அறிவு வளர்ச்சி நன்மையையே தேடுவித்தது என்று நாம் கொள்ள முடியாது. நன்மையே பயந்ததாகக் கொண்டால் தொடக்க காலத்து உலகத்தைவிட இன்றைய உலகம் மாயாபந்தமாய், சாக்கடைக் குழியாய், இன்னற் பிழம்பாய்ப் பலருக்குக் காட்சியளிக்கக் காரணம் என்ன? எவ்வளவு வசதியை மனிதன் தேடிக் கொண் டிருப்பதாக மகிழ்ச்சியுறுகிறானோ அவ்வளவு புதிய தீமை களையும் தேடியிருக்கிறான் என்பதற்காக அவன் நாணப் படவேண்டும்.

கல் தோன்றி, மண்தோன்றி ஆயிரம் ஆயிரம் ஆண்டு கட்கு அப்புறம் மனிதன் தன்னைப் பற்றியும், தான்

வாழும் உலகைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்க ஆரம்பித்தான். உணவு, இருப்பிடம், வெப்பதட்ப நிலைக்காக உடை ஆகிய மூன்றையும் கண்டு, அமைதியான வாழ்வை அமைத்துக் கொண்ட பின்னர், 'இந்த உலகம் எப்படித் தோன்றிற்று?' என்ற ஆராய்ச்சியைத் துவக்கிக் கொண்டான். அன்று துவக்கப்பட்ட ஆராய்ச்சி இன்றுவரை முடிவுக்கு வரக்கூடாத புதிராக இருந்து வருகிறது. அன்று பிடித்த சனியன் இன்று வரை மனித இனத்தை ஆட்டிக் கொண்டுதான் வந்திருக்கிறது.

'உலகம் எப்படித் தோன்றியிருக்கும்?' என்று கேள்வியை மட்டும் அவனால் கேட்டுக் கொள்ளமுடிந்ததே தவிர மறுமொழிக்குப் பெரிதும் திண்டாடினான். தானாக ஒரு சிறு மண்வீடும் அமையமுடியாது என்ற சித்தாந்தத்தை மனத்தில் வைத்துக் கொண்டு, இவ்வளவு பெரிய உலகமும் செயப்படு பொருளாகவே இருக்கவேண்டும் என்று கொண்டான். அதன்படி உலகத்தைப்படைத்தவனே சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் என்று சொல்லி மனிதனிடம் காணமுடியாத அரிய பண்புகளை ஆண்டவனுக்கு ஏற்றிவைத்தான். இந்த முடிவுக்கு வந்து ஏற்றுக் கொண்டவன் ஆஸ்திகன். உலகத்தோற்றத்தைப் பற்றி ஆராயத் தொடங்கி, இந்த உலகம் படைக்கப்பட்ட பொருள்; படைப்பவன் கடவுள் என்று சொல்லி ஆராய்ச்சியை வேறு வழிக்குத் திருப்பிக் கடவுளை ஆராய்ச்சியாக்கி விட்டான் ஆஸ்திகன். இதை முற்றிலும் எதிர்த்தான் நாஸ்திகன்.

'இவ்வளவு பெரிய உலகத்தை உண்டாக்கும் அவ்வளவு வல்லமை கொண்ட ஆண்டவன் எப்படி உண்டானார்? எங்கே இருக்கிறார்? எப்படியிருக்கிறார்?' என்று கேட்டான் நாஸ்திகன்.

"தானே உண்டானார்" என்று விடையிறுத்தான் ஆஸ்திகன்.

"இறைவன் தானாகத் தோன்றும் பொழுது, இந்த உலகம் ஏன் தானாகத் தோன்றியிருக்கக் கூடாது? இறை

வனைத் தான்தோன்றி என்று கொள்பவர்கள் இந்த உலகத்தையும் அதே தத்துவத்தின் பேரில் தானே தோன்றியதாகக் கொண்டால் வம்பில்லையே!" என்று நினைத்துப்பார்த்தான் நாஸ்திகன்.

"கடவுள் எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்?" என்ற கேள்விகள் ஆஸ்திகன் மனத்தைப்பெரிதும் பாதித்தன. சிந்தனையை விரட்டினான். அது சிறகொடிந்த பறவையைப் போல் கிடந்தது. அல்லது இப்படிச் சொல்லலாம்: செக்குமாட்டைப் போல் சுற்றிய இடத்தையே சுற்றிப் பார்த்தது! குழப்பமான நிலையில் மனம் சிக்கிக் கொண்டது. கடவுள் - ஆராய்ச்சி மனத்தின் எல்லையைத் தாண்டுவதை உணர்ந்தான். எனினும் ஏதோ ஒரு பொருள் இருக்கத்தான் வேண்டும் என்பதனைத் திண்ணமாக நம்பினான். அதைக் கீழ்க்கண்டவாறு சொல்லிக் கொண்டான்:—

மனம், வாக்கு, காயம் முதலிய மூன்றிற்கும் எட்டாமல் நிற்கிறார் கடவுள். 'இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்றெழுதிக் காட்ட' முடியாது. இப்படிச் சொன்ன மனிதன் தன்தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் ஒப்புக் கொண்டிருக்கிறான். கடவுள் ஆராய்ச்சியின் முடிவை அழகாக ஒழியாமல் கூறிவிட்டான். இதைக் கொண்டு நாஸ்திகன் தன்முடிவைக் கூற முன்வந்தான்.

"மனத்தால் சிந்தித்துக் கண்டு கொள்ளமுடியாதது. சொல்லால் அளவிட்டுத் தெரிய முடியாதது, காயம் அதாவது உடம்பால் கண்டு கொள்ளமுடியாதது, எதுவோ அதுவே கடவுள் என்று கூறுகிறாய்! எந்தப் பொருள் இல்லையோ, அந்தப் பொருளைப் பற்றி நீ எப்படிச் சிந்தித்துப் பார்த்துக் கண்டு கொள்ளமுடியும்? இல்லாத பொருள் ஒன்றை நீ எப்படிச் சொல்ல முடியும்? நீ எப்படிப் பார்க்கமுடியும்? எனவே அதைப் பற்றிய - உடனடியாகத் தேவைப்படாத ஒன்றைப் பற்றி - புதிராகவும் குழப்பமாகவும் இருக்கிற ஒன்றைப் பற்றி வீணாக எண்ணித் தப்பான முடிவுகளைச் சொல்லாதே! இந்த

உலகத்தைக் குளிப்பாட்டித் தூய்மைப்படுத்தப் போவதாக நினைத்துக் கொண்டு சேற்றை அள்ளிப் பூசாதே!'' என்று நாஸ்திகன் தன் கருத்தை வெளியிட்டான்.

இந்நிலையில் மக்கள் நாஸ்திகனின் சொல்லுக்குச் செவிசாய்க்க முன்வந்தனர். நாஸ்திகன் உலகத்தின் தோற்றத்தைப் பற்றித் தான் ஒன்றும் புதிதாகச் சொல்ல முடியாபடி இருந்தான். ஆஸ்திகன் செய்தது தப்பான முடிவு என்பதை மட்டும அவனால் காட்ட முடிந்தது. எனவே மக்கள் நாஸ்திகனின் பக்கத்தில் நிலையாக நிற்கவில்லை. 'கடவுள் - மதம் என்பவை இந்த உலகத்திற்குத் தேவைப்படாதவை' என்றான். ஆனால் மக்கள் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட அங்கத்தை வேண்டாம் என்று தள்ள விரும்பவில்லை. ஆஸ்திகன் பக்கத்தில் ஆள் சேர்ந்தது. ஆஸ்திகன் கை உயர்ந்தது! நாஸ்திகன் அன்றிலிருந்து தூற்றப்பட்டான்; இன்று வரை தூற்றுதலுக்கு ஆளாகியே இருக்கிறான். ஆனால் இறந்து விடவில்லை!

அவன் எண்ணங்கள் அவனோடு அழிந்துபடவில்லை! கடவுளை ஒவ்வொரு அணுவையும் இயக்குகிறார் என்றால், நாஸ்திகனுக்கு ஞானோதயம் அருளாமல், ஆண்டவனே இந்த எண்ணத்தை வளரவொட்டாமல் அழித்திருக்க வேண்டும்! அல்லது தன்னையாவது காட்டி, 'நாஸ்திகனே, உன்வாதம் முட்டாள் தனமானது'' என்று தடுத்தாட் கொண்ட படலத்தைக் கையாண்டிருக்கலாம். எதுவும் ஆண்டவன் செய்யவில்லை. அதுவே "நாஸ்திகனின் வெற்றிக்குப் போதுமானது.

உலகின் தோற்றத்தை ஆராயப் புகுந்த இருவரில் ஒருவன் கடவுள் என்ற புது உறுப்பைக் கற்பனை செய்து, அதன்மேல் உலகின் படைப்புத் தொழிலை ஏற்றினான். இது தவறென்றான் மற்றொருவன். ஆனால் தான் ஒன்றும் உலகின் தோற்றத்தைப் பற்றிக் கூற முடியாது போனமையால் பின்னவன் தோற்கவேண்டியதாயிற்று. ஆனால் அவன் வாதம் தோல்வியடைய

வில்லை. ஏனெனில் ஜீவத்துவமே அதன் வெற்றியைக் காட்டும்.

கடவுள் என்பது கற்பனை. அந்தக் கடவுள் இல்லாமலே நாம் வாழ்வை நடத்த முடியும்; வாழ்வுக்கு அது அனுவசியமான பொருள் என்று சொன்னான். மக்கள் அவன் பேச்சை ஆதரிக்கவில்லை. புதிதாக வந்த இறக்குமதிச் சரக்கில் அவர்கள் மிகமோகங் கொண்டனர்.

ஒருவன் ஒரு ஓநாயைக் கொண்டு வந்தான். ஊரில் திறந்து விட்டால் மக்களை அழித்துவிடும் என்ற காரணத்தால், 'அதைக் கொண்டு வராதே! அதை என்ன தேவைக்காகக் கொண்டு வருகிறாய்?' என்றான் அவன் தம்பி.

ஓநாயை முன்பின் பார்த்திராத வீட்டார் தம்பியின் சொல்லைப் பொருட்படுத்தவில்லை. சிலநாளில் வீட்டார் ஓநாய் சாதாரணமான நாயல்ல என்பதைப் புரிந்து கொள்ளவேண்டியதாயிற்று.

மதம், கடவுள் ஆகியன இந்த உலகத்தில் நுழைந்திருக்கும் வரலாற்றை இந்தக் கதைக்கு ஒருவாறு ஒப்புமைப்படுத்திக் கொள்ளலாம். பொதுமக்கள் எப்பொழுதும் நேரான வழியில் செல்பவர்கள் அல்ல; முட்டாள்தனத்தையே அதிகம் விரும்புகிறார்கள். அவசியமில்லாத விஷயங்களில் அதிக நம்பிக்கை கொண்டு நன்மையடையாவிட்டாலும் துன்பமும் தொல்லையும் அடையத் தயாராக இருப்பார்கள். தொல்லையையும் துன்பத்தையும் எடுத்துச் சொன்னாலும் அவர்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள்; இது அவர்களின் சிறப்பான பண்பு!

ஒரு சமயம் வால்டேர் என்னும் ஐரோப்பிய நாட்டு அறிஞர் 'மதம் கூடாது;' 'மதம் கூடாது' என்று சொல்லி வந்தாராம். கேட்டிருந்த மக்கள், "அதற்குப் பதிலாக நீங்கள் எதைக் காட்டுகிறீர்கள்?" என்று கேட்டார்களாம்.

"நான், ஒரு தீமையிருந்த வேதாளத்தை அழிக்க உமக்கு உதவி செய்யும் போது அதற்குப்பதிலாக என்ன காட்டுவேன் என்று கேட்கிறீர்களே" என்று சினத்துடன் கூறினாராம். 'இன்னல் இது; ஆகாது' என்று நன்ருகத் தெரிந்தாலும் பொதுமக்கள் அதை நீக்கிவிட எப்பொழுதும் யோசிப்பார்கள். இதை நன்ருகக் காட்டுகிறது வால்டேரின் வாசகம்.

உண்மையான ஆஸ்திகர்களும், நாஸ்திகர்களும் ஒரே முடிவிற்கே வருகின்றனர். கிட்டத் தட்ட ஒரே கருத்தையே பிரதிபலிக்கின்றனர். கடவுளை வழிபட்டால் நன்மையும் இல்லை தீமையும் இல்லை என்பதை ஒப்புக் கொள்கின்றனர். "கடவுளை வழிபட்டால் வேண்டியதெல்லாம் கிடைக்கும். 'புத்திர பாக்கிய'மாயினும் சரி, பத்தினி பாக்கிய மாயினும் சரி கடவுளை, வழிபடுங்கள்" என்று உண்மையுணர்ந்த தத்துவ ஞானிகள் கூறமாட்டார்கள். கடவுளை வியாபாரச் சரக்காகவும், வழிபடும் பக்தகோடிகளைக் கடைச் சரக்கை வாங்கும் வாடிக்கைக்காரர்களாகவும், கடவுட் பெருமைகளைச் சரக்கு விளம்பரமாகவும் வைத்துக் கொண்டு தூய்மையைக் களங்கப்படுத்திப் பிழைப்பு நடத்துவதை ஆஸ்திகத் தத்துவ ஞானி விரும்பமாட்டான். 'நம்பினவர்க்கு நடராசா நம்பாதவர்க்கு எமராசா' என்று அவன் அச்சுறுத்துவதில்லை. இறைவனை விரும்பினுல், வணங்கலாம். திருமூலர் இறைவனைப் பற்றிக் கூறுகிருர்; "கடவுள் - அதாவது பரம் பொருளை - சிந்தித்துப்' பாருங்கள். மிக நுண்ணிதானதும் விளங்காததும் ஆகிய பொருளைப் பார்க்கிறீர்கள். கூர்ந்து ஆராயுங்கள்" என்கிருர்.

நோக்குமின்? நோக்கும் பொருளோ நுண்ணிது!

இத்துடன் நின்றுவிடாமல்,

'போக்கொன்று மில்லை! வரவொன்றும் இல்லை!

என்று சொல்லுகிருர்.

"வணங்குங்கள்; இல்லாவிட்டால் நரகக் குழிதான் கிடைக்கும்' என்று சொல்லவில்லை. வணங்குவதால் பெரும் வருவாய் கிடைத்துவிடும் என்று எண்ணுதீர்கள், கடவுள் வழிபாட்டிற்கு நான் உங்களைப் பொய்கூறி அழைக்க விருப்பமில்லை" என்று சொல்கின்ற முறையிலே 'வரவொன்றுமில்லை' என்று கூறுகிறார்- அதனால் 'இழப்பொன்றும் இல்லை' என்ற அளவில் தான திருமூலர் தன் தத்துவ விசாரணையை முன் வைக்கிறார்.

'இழப்பு — வருவாய் ஆக இரண்டும் அற்றது; அப்படியானல் அது வேண்டியதுதானு?' என்று நாஸ்திகன் சிந்தித்துப் பார்க்கிறான். இவ்வாறு ஆஸ்திகனும் நாஸ்திகனும் கிட்டத்தட்ட ஒப்புக்கொண்ட கருத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். இடையூறு இருப்பதெல்லாம் பின்பற்றும் பாமர மக்களிடத்துத்தான்! இந்தப் பொதுமக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு, ஆஸ்திகன் ஆரம்பித்துவைத்த பாதையை ஆக்ரமித்துக்கொண்டு, அந்தப் பாதையில் சுங்கச்சாலை வைத்துப் பிழைப்பை நடத்துகிறார்கள் சில கயவர்கள்! ஆண்டவனைப்பார்க்கப் போகும் பிரயாணி அந்தப்பாதை மூலமாகப் பயணம் செய்து சுங்கத்துக்குப் பணம் அழுக வேண்டியிருக்கிறது. சுங்கக்காரனின் ஏமாற்று வித்தையைத் தெரிந்துகொள்ள முடியவில்லை!

தெய்வங்களை வைத்துப் பிழைத்த இவர்கள், அவற்றினிடத்தில் நன்றியறிதல் உடையவர்களாக இல்லை. தூய்மையாக இருந்த கடவுள்களை, கதைகளுக்குள்ளும், புராணங்களுக்குள்ளும் அடக்கி, பெருமைப்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு சிறுமைப்படுத்தி விட்டார்கள். நெய் திருடுதல், பெண் திருடுதல், பிறன்மனை விழைதல், களவாடல், பொய் சொல்லல் இன்னும் என்னென்ன உலகத்தில் அடாத செய்கைகளோ அனைத்தையும் கடவுள்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். மனிதன் தான் கொண்டிருக்கும் அத்தனை ஆசாபாசங்களையும் தெய்வங்களுக்கும் ஏற்றினன்.

"சேற்றதின் வயிற்றில் சிறியது பிறந்தால்
எத்தைத் தின்றது எங்கே கிடக்கும்?"

என்று யாரோ கேட்டதற்கு

"அத்தைத் தின்றது அங்கே கிடக்கும்"

என்று ஒரு ஆழ்வார் கூறினாராம். அந்த வாசகம் இந்த இடத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. கடவுள், 'ஆசாபாசங்கள்' அதாவது நன்மை தீமைகள் நிறைந்த மனிதனிடம் பிறந்துவிட்டார். அவனைப்போலவே அவரும் அவலங்கட்கும் ஆளாகாமல் இருக்க முடியுமா?

மனிதன் தான் நினைத்ததை எல்லாம் கடவுள்களுக்கு வடிவங்களாகக் கொடுத்திருக்கிறான். ஒன்றுக்குக் குதிரைத் தலை-மனித உடல், ஒன்றுக்கு யானை முகம், ஒன்றுக்குச் சிங்கமுகம்-இப்படி ஆச்சரியமான 'இரண்டும் கெட்டான' படைப்புக்களைப் படைத்து வைத்தான். உலகத்துத் தெய்வங்களையெல்லாம் சேர்த்து ஒரு பொருட்காட்சிசாலை வைத்தால் இந்த நாட்டானுக்குத்தான் 'அதிசய சிருஷ்டி'ப் பரிசு கிடைக்கும்!

நாஸ்திக உணர்ச்சி முழு உருவத்துடன் இல்லாவிட்டாலும், அரைகுறையாக இருந்துகொண்டு இவற்றைக் கண்டித்துக்கொண்டே இருந்தது.

அருமை பெருமைகளை வளர்க்கிறோம் என்று நினைத்துக்கொண்டு ஆஸ்திகர்கள் பாழ்படுத்த, 'தூய்மை பாழ்பட்டுப் போய்விட்டதே' என்று நாஸ்திகர் தூற்றி நிற்க, கடவுள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல!

3748.



புதுக்கோட்டை. செந்தமிழ்ப் பதிப்பகத்தில் அச்சிடப்பெற்றது.